விலை சதம் 60

பக்கங்கள் — 10

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

மலர் 22 | சித்திரை 22 | ஜ ஆகிர் 18 | ஞாயிற்றுக்கிழமை | (4—5—80) | இதழ் 81

பளிச்சிடும் வெண்மைக்கு 'அண்ணா நீலம்' 1 அவு., 1/4 ரூ, 1/2 ரூ, 1 ரூ. பைக்கட்டுகளில் விற்பனையாகிறது. வசதிக்கேற்ற பைக்கட்டுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா தொழிலகம்
இணுவில்.
தொலைபேசி: 7412

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 -5--5
PERIODICALS DIVISION
LIBRARY

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார்சோப் வாங்கி உபயோகியுங்கள்
விலை: பெரிய பார்சோப் 6/-
சிறிய பார் சோப் 3/-
நீலம், வெள்ளை பார்சோப்புக்கள் எங்கும் விற்பனையாகின்றன.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

ஈழவேந்தன், கோவை மகேசனை

# கூட்டணியிலிருந்து வெளியேற்ற தீர்மானம்

# இளைஞர் பேரவையினரிடம் விளக்கம் கேட்கவும் முடிவு

(நமது மட்டக்களப்பு நிருபர் தமிழினியவன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன், சுதந்திரன் ஆசிரியர் திரு கோவை மகேசன் ஆகியோரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேற்றுவதென்று கூட்டணி செயற்குழு தீர்மானித்துள்ளது கட்சியின் கட்டுப்பாட்டை மீறி பல பொது மேடைகளில் பகிரங்கமாக கூட்டணியைக் கண்டித்துப் பேசியதற்காகவே இவர்கள் இருவரையும் கட்சியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றுவதென்று நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த மே தினக்கூட்டத்தில் பொறுப்பு வாய்ந்த தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள்: மேதின ஊர்வலத்தில் எழுப்பிய கோஷங்கள், தாங்கிச்சென்ற அட்டைகளில் காணப்பட்ட சுலோகங்கள் குறித்து தமிழ்இளைஞர் பேரவையின் பொதுச்சபை உறுப்பினர்களை நேரில் அழைத்து விளக்கம் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்து.

உபதலைவர் திரு. வி. ரி. செல்லத்துரை தலைமையில் பட்டிருப்பு எம் பி. திரு. பி. கணேசலிங்கம்இல்லத்தில்நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வவுனியா எம் பி. திரு ரி சிவசிதம்பரம், முன்னாள் மூதூர் எம். பி. திரு ஏ. தங்கத்துரை, திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், பட்டிருப்பு எம். பி. திரு பி கணேசலிங்கம், திருமதி ம. அமிர்தலிங்கம், திரு. காசி ஆனந்தன், திரு வி நந்தையா ஆகியோர் பங்குபற்றினர்

திருவாளர்கள் ஈழவேந்தன், கோவை மகேசன் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை இம்மாதம் 24-ம் திகதிக்குள் விசாரணை செய்து அவர்கள் மீது எடுக்கக்கூடிய இறுதிநடவடிக்கைக்கு சிபார்சு செய்யுமாறு நடவடிக்கைக் குழுவைக் கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இளைஞர் பேரவையின் காலக்கெடு

தமிழ் இளைஞர் பேரவை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஜூன் மாதம் 30-ம் திகதி வரை விதித்த காலக்கெடு பற்றி அடுத்த செயற்குழுக்கூட்டத்தில் பரிசீலனை செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பொத்துவில்எம்பிபதவி

ஜனநாயக முறைப்படி பொத்துவில் தொகுதியில் ஏற்பட்டுள்ள எம் பி பதவிக்கான காலி இடம் கூட்டணிக்கே உரியதென்பதால் கூட்டணியே அத்தொகுதியில் புதிய எம். பி.யை நியமிப்பது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது

நேற்றைய செயற்குழுக்கூட்டத்தை இம்மாதம் 7-ம் திகதியும் தொடர்ந்து கொழும்பில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## சோபாவின் மரணம் தற்கொலையே

சென்னை, மே 3

பிரபல நடிகை சோபாவின் மர்மமரணம் தொடர்பாக விசாரணை நடத்திய பின் அவரது மரணம் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அவரது தலையணை உறையினுள் அவர் எழுதிய கடிதமொன்று கண்டெடுக்கப்பட்டதையடுத்தே தற்கொலையென்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவர் தனது மாமனாருக்கு எழுதியிருந்த அக்கடிதத்தில் 'என்மரணத்திற்கு நானே பொறுப்பு' என்று எழுதியிருந்தார். (கு)

## இந்து சமுத்திரத்தில் 111 நாட்கள் மீனையும் கடல் நீரையும் அருந்திய இலங்கை மீனவர் சுமாத்திராவில்மீட்பு

ஜாகர்த்தா, மே 3

111 நாட்கள் இந்து சமுத்திரத்தில் சிறிய இயந்திரப் படகில் தத்தளித்தபடியே கடல் நீரையும் பச்சை மீன்களையும் உணவாக அருந்தி உயிர் தப்பிய இலங்கை மீனவர்கள் இருவரை இந்தோனேசிய மீனவர்கள் சுமத்திராவுக்கு அருகே காப்பாற்றியுள்ளனர்.

ஜனவரி மாதம் 4-ம் திகதி இலங்கையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற சுனில் [24 வயது], சிறில் [21 வயது], நிமால் குணவர்த்தன ஆகியோர் மீன்பிடிக்க சென்றஇயந்திரப்படகு இந்துசமுத்திரத்தில்இயந்திரக் கோளாறு ஏற்பட்டதை அடுத்து அவர்கள் தத்தளித்த சமயத்தில் குணவர்த்தன இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் தற்போது இருக்கும் இம்மீனவர்கள் விரைவில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளனர். [இ]

## யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளி தலைமறைவு

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் திடீரென மறைந்துவிட்டதாகப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 6-ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட அரியாலையைச் சேர்ந்த ஆறுமுகம் என்ற நோயாளியை அந்த வார்ட்டில் பணிபுரியும் நர்ஸ் அதே தினமிரவு 8-20 மணியளவில் சென்று பார்த்த போது அவரைக் காணவில்லையாம்.

பொலிசார் இதுகுறித்து விசாரணை செய்துவருகின்றனர். [பண்ட. நி-இ]

## 15இஸ்ரேலியர்பலி

ஜெரூசலம், மே 3

பாலஸ்தீன விடுதலை இயக்க கமாண்டோக்கள் இஸ்ரேல் கைப்பற்றிய அரபுமண்ணில் ஜோர்டான் ஆற்றின் மேற்குக் கரையோரத்தில் உள்ள யூத குடியேற்றத்திட்டப் பகுதியில் நடத்திய திடீர்த் தாக்குதலில் 6 இஸ்ரேலிய

[8-ம் பக்கம் பார்க்க]

# பொல்காவலையில் ரயில்கள் மோதியதில் 25 பேர் காயம்!

## நேற்றுப் பகலிலிருந்து நேரடி ரயில்சேவை

[கொழும்பு]

பிரதான ரயில் பாதையில் பொல்காவலை-அளவை புகையிரத நிலையங்களுக்கிடையில் கடுகதி ரயில் ஒன்றும் வேகம் குறைந்த ரயில் ஒன்றும் நேற்று முன்தினம் மோதிக்கொண்டதையடுத்து இப்பாதையில் ரயில் சேவைகள் யாவும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. இதன் காரணமாக சில ரயில் சேவைகளும் ரத்துச்செய்யப்பட்டன

இதனையடுத்து பொல்கா... [illegible] மூலம் ஏற்றி இறக்கப்பட்ட போதிலும் சேதமடைந்த பாதை உடனடியாகத் திருத்தப்பட்டு நேற்றுப் பகல் 1-30 மணிக்குப் பின்னர் ரயில் சேவைகள் யாவும் நேரடியாக மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை பொல்காவலையை நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் பொல்காவலைக்கண்மையில் "சமிக்ஞை"க்காகக் காத்திருந்தபோது பின்னால் வந்த கடுகதி ரயில் அதனை மோதியது.

இதன் காரணமாக இரு பெட்டிகள் முற்றாகச் சேதமுற்றதுடன் 26 பேருக்குக் காயம் ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் அளவை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இதையடுத்து நேற்றுமுன் தினம் கொழும்பிலிருந்து புறப்படவேண்டிய இரவு யாழ். தபால் ரயிலும் நேற்றுக்காலை யாழ் ... ரயிலும் ரத்துச் செய்யப்பட்டன

நேற்றுமுன் தினமிரவு காங்

(10 ம் பக்கம் பார்க்க)

## மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு வேலைவாய்ப்பு உண்டு

1. மேசன் தொழில்
2. தச்சுத் தொழில்
3. மின்ஒட்டு வேலை
4. உதவியாளர்கள்

கீழ்க் காணும் விலாசத்திற்கு நேரில் உடன் தொடர்பு கொள்ளவும்

S. PATHMANATHAN J P

MANPOWER DEVELOPMENT SERVICES

48 (144), MANIPAY ROAD, JAFFNA.
LABOUR LICENCE NO 500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

எமது தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு உருட்ட பெண் பிள்ளைகள் தேவை. நல்லூரில் இருக்கும் எமது தொழிற்சாலைக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர். சான்றிதழ்கள், நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 5658

புடவை வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை. 5-5-80 திங்கட்கிழமை 8 மணி தொடக்கம் 10 மணி வரை, நேரில் வந்து சந்திக்கவும். கிதாலி மொட்ஸ் சென்ரர், 143, 144, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 5627

அனுபவம் உள்ள கொம்பவிட்டர் தேவை. விபரத்துடன் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி 5639

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு சிப்பந்திகள் (விற்பனையாளர்) தேவை. நல்லொழுக்கமுள்ள, வேலை செய்ய ஆர்வமுள்ள இளைஞர்கள் சான்றிதழ்களுடனும், நற்சாட்சிப் பத்திரங்களுடனும் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். 5654

## விற்பனைக்கு

சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் பாவித்த இந்திய ஒரு 1200 விற்பனைக்குண்டு தொடர்பு! கணபதிப்பிள்ளை இராசையா, சிவகாமி அம்மன் கோவில் வீதி, இணுவில். 5633

திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு முன்பாக, பிரதான வீதியுடன் அமைந்த 8½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு சின்னத்தம்பி தியாகராசா, திருநெல்வேலி வடக்கு, விவசாயப் பாடசாலைக்கு அண்மையில் திருநெல்வேலி. 5639

100 இலாச்சம் நெற்பயிர் செய்கை "புன்னாலைக்கட்டுவன் காணி" பொன்னுரையில் விற்பனைக்குண்டு. வாங்க விரும்பும் ஆகக் கூடிய விலையைக் குறிப்பிட்டு கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 5645 C/O ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 5645

## விற்பனைக்கு

நல்ல நிலையில் 26 ஸ்ரீ 3488 டாட்டா பென்ஸ் லொறி விற்பனைக்கு உண்டு. க. சிவபாதசுந்தரமூர்த்தி, தலங்கிரி, புத்தூர். 5600

வட்டக்கச்சி சந்தையுள் கட்டடத்துடன் கடை ஒன்று, வட்டக்கச்சி வில்சன் ரோட்டில் உள்ள பேக்கரி ஒன்று, (கட்டடம், காணியுடன்) வட்டக்கச்சி ஆறுமுகம் ரோட்டில் 6 ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் காணி, 2 ஏக்கர் மேட்டுக் காணி (இரண்டு வீட்டுடன்) கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும், வைத்திலிங்கம் அங் சன், கண்டி வீதி, கிளிநொச்சி. ரெலிபோன் நம்- 236 தொடர்பு கொள்ள வேண்டிய நாட்கள்: 5-5-80 தொடக்கம் 12-5-80 வரை 5665

புத்தம் புதிய ஜூசிக்கா கமெரா பிளாஸ் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பு நாவலர் வள்வு வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு. 5629

## வாடகைக்கு

உரும்பராய் சந்திக்கு அண்மையிலுள்ள சகல வசதிகளுடனும் கூடிய தேநீர்க்கடை வாடகைக்கு கொடுக்கப்படும் நேரில் தொடர்பு கொள்ளவும் மு. புண்ணியமூர்த்தி, வேம்பன் ஒழுங்கை, உரும்பராய் சந்தி. 5642

## தேவை

கல்லூரி ஆசிரியருக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் நல்ல சூழலில் அறை தேவை. உணவுடன் கருஜ் வசதி விரும்பப்படும். ந. சிவகுமாரன், 32, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 5643

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் இராச வீதி வழியில் கோசெஸ், இன்சுரன்ஸ் சேர்டிபிக்கேற் உள்ளடக்கிய பிளாஸ்ரிக் பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எஸ் தேவரஞ்சன், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 5661

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில், அடையாள அட்டையுடனான பேர்சு தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள், ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும் சண்முகராஜா, 65, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம். 5651

## வகுப்புகள்

விஞ்ஞான முறைப்படி உடை வெட்டுதல், தயாரித்தல், சிகை அலங்காரம் (Hair Style) முதலியன அனுபவமிக்க மாஜி-சிங்கர் தையல் ஆசிரியையால் கற்பிக்கப்படும் விபரங்கட்கு: திருமதி பவளம் சிவசுப்பிரமணியம், 40, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 5663

## கல்வி

ஜூலை மாதம் முதல் வாரம் நடைபெற இருக்கும் லண்டன் பிற்மன் பரீட்சைக்கு மே மாதம் 14-ந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன ஸ்ரீமீனாட்சி கமர்ஷல் கல்லூரி, 55, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5648

## கேள்வி விண்ணப்பம்

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் உள்ள 10 துவிச்சக்கர வண்டிகள் பொருத்துவதற்கான கூலிக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. மேற் குறிப்பிட்ட விண்ணப்பங்களை 7-5-80 புதன் கிழமைக்கு முன்பாக கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய்
பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய
5657

### நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாற் பண்ணைத் திட்டம்

### மந்தை உணவு வழங்குதலுக்கு கேள்விப்பத்திரம் கோருதல்

மேற்படி பாற் பண்ணைக்குத் தேவையான தவிடு, சோளம் ஆகியன தொடர்ந்து ஆறு (6) மாத காலத்திற்கு வழங்குவதற்கு மந்தை உணவு விற்பனையாளரிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. இவற்றின் விலையைக் குறிப்பிட்டு 1980-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதிக்கு முன் உங்கள் கேள்விப் பத்திரங்களை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பொருட்களின் தரத்தை நேரில் பரிசோதித்தே வாங்குதல் இறுதி முடிவு செய்யப்படும்.

தலைவர்,
நல்லூர்த் தொகுதி
அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
பாற் பண்ணைத் திட்டம்
62, வைமன் வீதி,
நல்லூர்.
5655

## கிறிக்கற் சுற்றுப்போட்டி

உரும்பராய் விளையாட்டுக்கழகம் வரையறுக்கப்பட்ட 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிறிக்கற் சுற்றுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 8-5-80-க்கு முன்னர்

வே. கணேசநாதன்
மானிப்பாய் வீதி,
உரும்பராய் என்னும்
முகவரிக்குத் தொடர்பு
கொள்ளவும். 5662

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞர்களை பலியாகினர் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ள அதே வேளையில் இத்தாக்குதலில் 15 இஸ்ரேலியர்கள் பலியாகினர் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கம் இறிவித்துள்ளது.

வாங்குங்கள்
பிரவுண்சன் அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட் மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதம் பதிக்கப்பட்டது.

## ரேனர் பிறிசிசன் லேத்

சென்ரர் ரூ சென்ரர் 33"—80"
கைற் ஒவ் சென்ரர் 8" அல்லது 12"

3 யோ சக் 4 யோ சக் கூலற் பம் ஸ்ரெடி முதலியன சகிதம் உருக்கிலான பேட் கொண்ட இறக்குமதிசெய்த சைஞ லேத்கள் கைவசம் உண்டு

தொடர்புகொள்ளவும்:

ராதா மெசின் கொம்பனி
95, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
5656

## அத்தனுசியார் வைத்தியசாலை கிளை திறப்புவிழா

ஆலடி-காரை நகர்



காலம்:
11-5 80
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3 மணி.
வைத்தியர்கள்:
சித்தவைத்திய
கலாநிதி டாக்டர்
அல்போன்சஸ்
அத்தனுசியார்
(D.I.M.S I.S.D J.P.)
டாக்டர் திருமதி வசந்தி அத்தனுசியார்
(RAMP)
சிகிச்சை பெறும் நாட்கள்:
ஞாயிறு, புதன்கிழமைகளில் பிற்பகல்
1-00 மணி தொடக்கம் 3-00 மணிவரை
பிரதம வைத்தியசாலை,
பண்டத்தரிப்பு மாதகல் வீதி (5655)

## யாழ். றோட்டரிக் கழக சமூகசேவை நிதிக்காக

அகில உலகப் புகழ் - பரத கலாஞ்சலி

### தனஞ்செயன் - சாந்தா

நாட்டியக் குழுவினர் அளிக்கும் பரத நாட்டிய - கதகளி

## நடன விருந்து

7-5-1980 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

பிரவேசம்: போஷகர்: ரூபா 100/- [இருவருக்கு],
ரூபா 30/-, ரூபா 15/-

இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

டிக்கட் கிடைக்குமிடம்:

(1) சின்னத்துரை அன் பிறதர்ஸ், (2) சுபாஸ் கபே,
(3) பூபாலசிங்கம் புத்தகசாலை — பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(4) கொழும்பு ஸ்ருடியோ — ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(5) யாழ் மோட்டர் ஸ்ரோர்ஸ் — ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
5641 (6) சிங்கப்பூர் பார்மஸி லிமிட்டெட் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்

மாற்றத்தக்க நிலை வைப்புக்களுக்கு
உயர்ந்த விகித வட்டி
கொடுக்கிறது

| முதிர்வு காலம் | வட்டி விகிதம் மாதாந்தக் கொடுப்பனவு | வட்டி விகிதம் முதிர்வுகாலக் கொடுப்பனவு |
| --- | --- | --- |
| 12 மாதம் | 20% | 21% |
| 18 மாதம் | 21% | 22% |
| 24 மாதம் | 22% | 24% |

கூடிய தொகைகளுக்கும் குறுகிய கால வைப்புகளுக்கும் விசேட வட்டி ஒழுங்குசெய்யலாம்.

செ. லோகநாதன்
முதல்வர்

தலைமைக் காரியாலயம்: 129, கோவில் வீதி யாழ்ப்பாணம். டெலி: 8183

கொழும்பு முகவர் நிலையம்: 52, ஐந்தாம் ஒழுங்கை கொழும்பு-3. டெலி: 23973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலம் நோக்கும் நாள் எதுவோ!

அனலை ஆறு. இராசேந்திரம்

யாழ்ப்பாணம் புகைவண்டி நிலையத்திலிருந்து பஸ் நிலையத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான் பிரபாகரன்.

இரவு முழுவதும் ரயிலில் நின்றபடியே பயணம்செய்த களைப்பும் இரண்டுமூன்று வருடங்களாக முகத்தில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட குடும்ப நிலைபற்றிய கவலைகளும் ஒன்று சேர்ந்து அவன் முகத்தில் அப்போது ஜீவகளை இல்லாத ஒரு தன்மையை ஏற்படுத்தியிருந்தன.

பத்து வருடங்களுக்குமுன் அவனைப் படிப்பித்த ஆசிரியர் முருகவேள் எதிரேவந்துகொண்டிருந்தார்.

தலையைக் குனிந்துகொண்டான் பிரபா. அவர் பார்வையிலிருந்து தப்பி அப்பாற் சென்றுவிடவேண்டுமென்று துடித்தது அவன் மனம்.

"தம்பி..."

-குரல்கேட்டுத் திரும்பிப் பார்த்தான் பிரபா. ஆசிரியர் அவனையே! கூர்ந்துபார்த்தபடி நின்றுகொண்டிருந்தார்.

"நீர் ... பிரபா ... கரன் தானே?"

இளம் புன்னகை ஒன்றை வாயிற்செயற்கையாகக் காட்டியவாறே 'ஆம் சார்...' என்றான் அவன்.

"என்ன... நல்லாய்க் காஞ்சு போனீர் போல் இருக்கு? இப்ப என்ன செய்கிறீர்?'- ஆசிரியர் விசாரித்தார்.

'சும்மாதான் நிக்கிறன் சார்.'

"உமக்கு நல்ல 'ரிசல்ற்' வந்தது நினைவிருக்கு. ஏன் ஆரையேன் பிடிச்சு ஏதேனும் தொழில் தேடியிருக்கலாமே? உம்மோட படிச்ச தங்கராசாவைக் கண்டன். பாங்கில வேலைசெய்யிறதெண்டும் நல்லா இருக்கிறதெண்டும் சொன்னனே.'

ஆம்? பேச்சுக்குத் தலை அசைத்துக் கொடுத்தான் பிரபா.

ஆசிரியர் தொடர்ந்தார்...

"அது சரி...அப்பா, அம்மா, தங்கச்சிமார் சுகமா?"

'அப்பா மோசம் போயிட்டார் சார். அம்மா, தங்கச்சிமார் சுகமா இருக்கினம் சார்.'

'தங்கச்சிமார் ஆரேனும் முடிச்சிட்டினியா?'

'ஒருவரும் முடிக்கேல்ல சார்.'

"சரி வாறன்'

ஆசிரியர்போய்விட்டார்.

தெளிந்தநீரோடைபோன்று இருந்த பிரபாகரனுடைய மனக் குளத்தில் ஒரு சிறிய கல்லை எறிந்த உணர்வலைகளைத் தட்டி எழுப்பிவிட்டுப் போகிறார் என்பது அவருக்கு எங்கே தெரியப்போகிறது.

அது பிரபாவுக்குத்தான் தெரியும்.

●

தங்கராசா...? அவனும் பிரபாகரனும் பள்ளி நண்பர்கள். ஒன்றாகப் படித்தவர்கள்.

படித்துப் பரீட்சையில் தேறி தொழிலுக்கு மனுச்செய்துவிட்டும் ஒன்றாகத் திரிந்தவர்கள்.

நாலு வருடங்களுக்குமுன் எப்படியோ...தனது இடைவிடா முயற்சியால் வங்கி ஒன்றில் எழுதுவினைஞனாகப் பதவி தேடிக்கொண்டான் தங்கராசா

அவன் இன்று ஒரு இலட்சம் பெறுமதியான சீதனத்தோடு திருமணம் செய்துவிட்டான். அவனால அவனுடைய சகோதரிகளும் வாழ்வுகண்டுவிட்டார்கள்.

'எனக்கு ஏதேனும் தொழில் ...? நல்ல சீதனத்தோடு எங்கேனும் திருமணம்? அதனால் சகோதரிகளுக்கும் வாழ்வு...?'

காலால் அழுத்தும்போது வாடிச் சோர்ந்துபோகும் தொட்டாச் சுருங்கி இலைகள் மீண்டும் நிமிர்ந்துநிற்பது போல, இவையெல்லாம் பகற் கனவுகள் என்று எப்போதோ முடிவுகட்டிவிட்ட பிரபாவின் உணர்வுகள் ஒருகணம் நிமிர்ந்து மறுகணம் மடிந்துபோகின்றன.

மூன்று நாட்களுக்கு முன்பு எதிர்பாராத விதமாக தங்கராசாவைக் கண்டான் பிரபா,

"எப்படித் தங்கராசா?"

'சுகமாயிருக்கிறன் நிண்டு கதைக்கநேரமில்லை. இன்னுமொருநாளைக்குச் சந்தித்து ஆறுதலாகக் கதைப்பம்' -பிரபாவின் நாடியைத் தொட்டுத் தடவி அவனிடம் விடைபெற்றான் தங்கராசா. கூடவந்த தன்னுடைய மனைவியோடு ஏதோ ஆங்கிலத்திற் பேசியவாறே நடையைத் தொடர்ந்தான்.

அவனுடைய தோற்றம், நடை, உடை யாவும் மாறி உண்மையிலேயே அவன் ஓர் உயர்ந்த நிலையை அடைந்துவிட்ட கோலம்...வாழ்வின் திருப்தியைக் காட்டும் பூரித்த முகம்...அருகே அன்னநடை பயிலும் அழகுமயில்...

"நானும் இப்படி...'

காந்தப்புலமொன்றுள் அகப்பட்ட இரும்புத் துண்டானான் பிரபா தங்கராசாவின் அந்த நிலையை எண்ணி எண்ணிஏங்கினான்.

அது பொறுமையால் வந்த ஏக்கம் அல்ல. அவன் உள்ளத்திற் குவிக்கப்பட்டிருக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட உணர்வுகளின் ஒரு கணநேர வெளிப்பாடே.

●

"கிறீச்...''

—கார் ஒன்று பெருஞ் சத்தமிட்டு 'பிரேக்' போட்டவாறே பிரபாவின் காலடியில் வந்து நின்றது.

'என்ன தம்பி ரோட்டும் வீடெண்ட நினைவோ?'- அந்தக் கார்ச் சாரதி அவனை முறைத்துப் பார்த்துவிட்டு ஓட்டத்தைத் தொடர்ந்தான்.

தன் நிலையை எண்ணி வெட்கப்பட்டவாறே பஸ்நிலையத்திற்குள் போய்விட்டான் பிரபா.

நாலு ஐந்து வருடங்களுக்கு முன் பிரபாவிடமும் நாலாயிரம் ரூபா இருந்திருக்குமானால் எப்படியும் அவனும் தங்கராசாவைப் போல் ஏதோ ஒரு தொழிலில் இருக்கமுடியும் தான்.

ஆனால் ஓராயிரம்கூட வழியில்லாதவர்கள் வயிற்றில் வந்து பிறந்துவிட்டானே அவன்.

வர்த்தமானிகளைத் தவறவிடாது பார்த்து மனுப்போடுவதும் தந்தையோடு கமத்தில் உதவிசெய்வதுமாக இரண்டு மூன்று வருடங்கள் கழிந்தன.

கமத்தொழிலை கையும் கணக்கும் சரி-மிகுதி எதுவுமே இல்லை என்பதை நிரூபிப்பவர் போல் குடும்பத்தைத் தவிக்க விட்டு தந்தையும் போய்விட்டார். அவர் காலமாகி இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன.

பிரபாவுக்கும் வயது இருபத்தெட்டு முடிந்து இருபத்தொன்பது ஆகிவிட்டது.

இரு சகோதரிகள் ஏற்கெனவே வாழ்வுச் சோலையில் வண்டாய்ப் பறந்து தேனுண்ணத் துடிக்கும் பருவம்...மற்றைய இருவர் இன்றோ நாளையோ மலர்ந்துவிட மெள்ள மெள்ள முகையவிழ்க்கும் மொட்டுக்கள்.

முழுப்பொறுப்பும் பிரபா மீது விழுந்துவிட்ட பயங்கரச் சூழ்நிலை!

தந்தையின் மரணத்தைத் தொடர்ந்து கொழும்பில் ஒரு பலசரக்குக் கடையில் விற்பனையாளனாகச் சேர்ந்தான் பிரபா. மாதம் சம்பளமாகப் பெறுகின்ற ரூபா நூற்றைம்பதையும் வீட்டுக்கே அனுப்பிவந்தான். [illegible] போக்குவதே திண்டாட்டமாகத் தெரிந்த நேரத்தில்... தங்கையரின் வாழ்வுபற்றி அவனால் நினைத்துமே பார்க்க முடியாதிருந்தது.

அதனால்தான் வெளிநாடு போய் உழைக்கலாமென்று எண்ணினான் பிரபா.

பிரபாவோடு படித்தவர்களும் அவனுக்குத் தெரிந்தவர்களுமாக அவனது கிராமத்து வாலிபர்கள் இருபத்தைந்து முப்பது பேர்வரை வெளிநாடுபோய்விட்டார்கள்.

"சின்னத்தம்பி மகன் சத்தியானந்தன் மாதம் ஆறாயிரம் ரூபாவரையில் உழைக்கிறான்'

"இராமச்சந்திரன் மகன் கூத்தன் நாலாயிரத்தைநூறு வரையில் அனுப்புகிறான்'

'தில்லையனின் சிதம்பரம்... ஐயாயிரம்.'

—ஊர்க்கதைகள் பிரபாவின் உணர்வுச்சுடருக்கு எண்ணெய் வார்த்தன.

தாயிடம் சொல்லி எப்படியாவது பயணத்திற்கான செலவைப் பெறுவதற்காகவே அவன் கொழும்பிலிருந்து புறப்பட்டான்.

●

பார்வதி—பிரபாவின் அன்னை குடியிருந்த வீடு வளவை ஈடு கொடுத்தாவது, அவனின் பிரயாணச்செலவைத் தேடுவதற்காகப்பட்ட பாடு...!

ஒன்று...இரண்டா... அதற்காக அவள் திறந்த படலைகள்...?

ஒரு கிழமையாக அலைந்து ஈற்றில்தான் சிங்கப்பூர் மணியத்தாரிடம் அவள் போனாள்.

அப்போதுதான் அவர் அந்த திருமண விடயத்தைச் சொன்னார். இடமறிந்து காரியம் நாட்டும் பேர்வழி அல்லவா அவர்?

"பார்வதி, நீயும் பத்தோ பதினைஞ்சோ வேணுமெண்டு நிக்கிறாய்! இந்தக் காலம் அந்தளவு காசுக்கு எங்கே போய் உழைச்சாலுமே வட்டி கட்ட ஏலாது. வீடு வளவையும் பறிகொடுத்திட்டு நீ என்ன தெருவிலயா நிக்கப்போறாய்? மறுபேச்சின்றி தெய்வானையின் மூத்த மகளுக்காம் உன்ர மகனைச்செய்யன். எல்லாமாக இருபத்தைஞ்சு முப்பது வரையில் தருவினம். பொடியன் வெளிநாடு போறதெண்டாலும் போகலாம். உங்களோட ஒத்துப்போகக்கூடிய சனங்கள் அதுதான் சொல்றன் இதைவிடக்கூட எங்குமே எதிர்பார்க்க ஏலாது. வசதியானவ உன்னட்ட ஏன் வரப்போகினம்'

பார்வதிக்கும் அது சரியாகவே பட்டது.

ஒற்றைக்காலில் நின்று மகனை உடன்பட வைத்து, மிகச் சுருக்கமாகக் கல்யாணத்தையும் நிறைவேற்றி வைத்தாள் அவள்.

மாதங்கள் நான்கு ஓடி மறைந்தன.

வீட்டின் சூழ்நிலை பழையதாகவே இருக்க மேலும் மூவர் தஞ்சம் புகுந்ததில பிரபாவுக்கு,

ஆம், அவன் மனைவி, மாமி, மச்சாள் அனைவர்க்கும் இனி அவன்தானே பொறுப்பு

வெளிநாடு பறக்க ஆயத்தமானான் பிரபா.

அவனை வழியனுப்புவதற்காக அவனுடைய தாய், மனைவி, சகோதரிகள், மாமி, மச்சாள் அனைவருமே கட்டுநாயக்கா விமானநிலையம் சென்றிருந்தனர்.

கண்ணீர் மலர்களைக் கணக்கின்றிச் சொரிந்து அனைவரிடமும் விடைபெற்றான் பிரபா.

பதிலுக்கு அவர்களும் அவனுக்கு கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கினர்.

விமானத்தில் ஏறி உட்கார்ந்து, அது உயரக் கிளம்பும் வரை அவனையே பார்த்து நின்ற அந்த நீலவிழிகள் நெஞ்சின் நிரந்தர அலைகளாக அவனுடன் கூடவேபயணமாயின. வான் நோக்கும் அந்த விழிகள் நிலம்நோக்கும் நாள்தான் எதுவோ?

[யாவும் கற்பனை]

---

## மின்னுவதெல்லாம்...

### உருவகம்

அந்தப் பச்சைப் பசேலென்ற புற்றரையில், அழகாகநெடிதுயர்ந்துநிமிர்ந்து நிற்கும் தென்னைமரங்கள்! மரங்கொத்தி ஒன்று ஒரு தென்னையில் பறந்துவந்து உட்கார்ந்த நேரத்தில் பிறந்து மூன்றே நாளே ஆகியிருந்த தவளைக்குஞ்சு ஒன்றும் தனியாக மரத்தடிக்கு உலாவ வந்தது. தூரத்தில் ஒரு அழகான காட்சியைக் கண்டு அப்படியே பிரமித்துப்போய் உட்கார்ந்துவிட்டது தவளைக்குஞ்சு.

'ஆகா! என்ன மென்மையான பளபளப்பான மேனி! மென் மஞ்சள் நிறத்தில் கரிய புள்ளிகள்-பழைய உடையை- அந்த வெள்ளை 'நெற்' உடையைக் கழற்றி எறிந்துவிட்டு உள்ளே இருந்த புத்தம் புது ஆடையுடன் அந்தப் பிராணி மெதுவாக அமைதியாக வளைந்து வளைந்து செல்வது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது!

தோலைக் கழற்றிவிட்டு ஊர்ந்து செல்லும் பாம்பைப் பார்த்துவிட்ட தவளைக் குஞ்சுக்கு ஓரே உற்சாகம்! அருகில்போய் அதன் தோளில் ஏறி விளையாடினால் என்ன என்று எண்ணுமளவிற்கு ஓரே உற்சாகம்... திடீரென்று... ஹி... ஹி... ஹிக்...ஹிக் என்று ஒரு சத்தம். பயந்துபோய் திரும்பிப் பார்த்தது தவளைக் குஞ்சு.

முதுகில் மூன்று வாள்... கூரியவாள்... வைத்துக்கொண்டு, சடைபோன்ற வாலை உயர்த்தி அசைத்துப் பெரிதாகச் சத்தம் போட்டபடி ஓடிவரும் அந்த அணிலைக் கண்டதும் பெரிதும் பயந்துபோய்... இதயம் பக்...பக் என்று அடித்துக்கொள்ள... ஒரே வேகமாக ஓடத்தொடங்கியது குஞ்சு மெதுவாக ஓசையின்றிச் சாதுவாக ஊர்ந்து செல்லும் பாம்பின் பக்கம் ஒரு தாவில் எட்டிப் பாய்ந்து உதவி கேட்க நினைந்தது. 'லபக்...' ஒரே பாய்ச்சலில் பாம்பின் வாயினுள் முழுதாகச் சென்றுவிட்டது தவளைக் குஞ்சு... பாவம்!

இந்த நிகழ்வுகளை எல்லாம் பார்த்துக்கொண்டு மரத்தின்மேல் அமர்ந்திருந்த மரங்கொத்தி மனம் மிக நொந்துபோய், எதிர்காலச் சந்ததியினரின் நன்மைக்காக... அந்த மரத்தில் இரண்டு வாக்கியங்களைப் பொறித்துவிட்டுப் பறந்துபோனது.

'புறத் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்துவிடாதே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல'

-கோகிலா மகேந்திரன்

---

# ஒரு உண்மை துள்ளிவிழுகின்றது

மணியம் சிவகுமாரன்

பிரதீபிற்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவே என்று வியந்துகொண்டான். வேடிக்கையிலை பதின்மூன்று வருடங்கள் அல்லவா அவன் தனது ஊரையும், நாட்டையும் விட்டுப் பிரிந்திருக்கிறான். பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது பதினைந்தாவது வயதில் வெளிநாடு சென்றது...பின் அங்கே படிப்பை முடித்துக்கொண்டு அங்கேயே தொழிலில் ஈடுபட்டது...இவையெல்லாம் பிரதீபிற்கு பழைய கதை.

ஆனால் அவன் இந்த மண்ணில் அன்று வெறுத்த பழைமைகள் மாறியிருப்பதைக் கண்டபோது மனம் மகிழ்ந்து போனான்.

அப்போதெல்லாம் பிரதீப்பின் வளவிலுள்ள தென்னை மரங்களில் எல்லாம் சரவணைதான் ஏறுவான். சரவணையின் மகன் சுந்தரமும், பிரதீப்பும் ஒரே கல்லூரியில் கல்விகற்றனர். நெருங்கிய நண்பர்கள். ஆனால் சுந்தரத்துடன் பிரதீப்பைக் கண்டுவிட்டால் பிரதீப்பிற்கு அவனது வீட்டில் அடியும் உதையும் தான் கிடைக்கும். சுந்தரம் கீழ்ச்சாதிக்காரனும், அவனுடன் திரியாதே, கதைக்காதே என்று பிரதீப்பிற்கு வீட்டில் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. ஒருமுறை சுந்தரம் மறுத்தபோதும் பிரதீப் சுந்தரத்தையும் அழைத்துக்கொண்டு கோயில் ஒன்றுக்குள் சென்றுவிட்டான் அன்று சுந்தரத்திற்கு விழுந்த அடியும் உதையும்...! கோயிலைவிட்டு சுந்தரத்தை துரத்திவிட்டனர். சுந்தரத்துடன் பழகாதே என்று ஊராரினாலும் பிரதீப் அன்று எச்சரிக்கை செய்யப்பட்டான்.

உயர்சாதி, கீழ்ச்சாதி என்பதெல்லாம் ஆரம்பத்தில் பிரதீப்பிற்குப் புரியவில்லை சுந்தரத்துடன் தான் பழகுவதைத் தடுப்பவர்களையே அவன் வெறுத்தான். தன் நட்பை முறித்துக்கொள்ள அவன் மனம் ஒருப்படவில்லை. ஆனால் நாட் செல்லச் செல்ல சாதி ஏற்றத்தாழ்வுகள் ஓரளவு புரியத்தொடங்கியபோது அவ்வித ஏற்றத்தாழ்வுகளை வெறுக்கத் தொடங்கினான். அதேசமயம் அவன் தன் நாட்டைவிட்டு வெளிநாட்டில் உள்ள தன் மாமாவுடன் தங்கியிருந்து படிக்கவேண்டி ஏற்பட்டது.

பிரதீப் மீண்டும் தான் பிறந்த மண்ணிற்கு வந்தபோது, எதிர்பாராத மாறுதல்கள் அவனுக்குத் தெரிந்தன. கோயில்கள், கடைகள் என்பவற்றில் எல்லாம் பிரதீப் முன்பு கண்ட

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'அநாதை இல்லம்' நடத்தும் குழந்தைகள் ஏற்றுமதி!

'அநாதைக் குழந்தைகள் இல்லம்'

இப்படியொரு பெயருடன் ஸ்தாபனம் ஒன்றை நாம் கண்டதும் எம்மையறியாமலே அவற்றின் மேல் இரக்கப்படுவதுண்டு. அவற்றை நடத்துபவர்களை தர்மசீலர்களாக கருதுவதும் உண்டு. ஆனல் இந்த ஸ்தாபனங்கள் "குழந்தைகள் ஏற்றுமதியாளர்களா"க செயல்பட்டு வருகின்றன என்பதை அறிந்தால் வேதனைப்படாமலிருக்கவும் முடியாதல்லவா.

தன் வாழ்நாள் முழுவதும் ஏழைக் குழந்தைகளுக்காகவே அர்ப்பணித்து நோபல் பரிசு பெற்ற அன்னை திரேசாவின் கால்கள் பதித்த பாரதத்தின் ஒரு பிரதேசத்தில் தான் இப்படி நடக்கிறது என்னல் வேதனைகள் நிச்சயம் பன்மடங்காகிவிடும்.

தென் இந்தியாவில் பிடவை ஆலைகளுக்குப் புகழ் பெற்ற கோயம்புத்தூர் சர்வதேச சந்தையில் முக்கிய இடத்தைப் பெற்றது. அங்கு உற்பத்தி செய்யப்படும் ஜவுளி வகைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுக்கின்றது. ஜவுளி ஏற்றுமதியுடன் தற்போது 'அநாதைக் குழந்தைகள்' ஏற்றுமதியும் பட்டியலில் சேர்ந்து கொண்டுள்ளது. இந்த ஏற்றுமதியால் கோயம்புத்தூரில் சிலர் திடீர் பணக்காரர்களாகவும் மாறியிருக்கின்றனராம்.

இவ்வாறு குழந்தைகளை ஏற்றுமதி செய்வோர் "குழந்தைகள் ஏற்றுமதியாளர்கள்" என்று தம்மையோ தமது ஸ்தாபனத்தையோ விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் 'அநாதைகள் இல்லம்' என்ற பெயரிலேயே இந்த வளம் கொழிக்கும் வர்த்தகத்தை மேற்கொண்டு வருகின்றார்களாம்.

கோயம்புத்தூருக்கு அருகில் சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ள போத்தனூர், என்னுமிடத்தில் இம்மாதிரியான மூன்று அநாதை இல்லங்கள் உள்ளன. இந்த இல்லங்களுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர்களும் மேற்கத்திய பாணியில் அமைந்துள்ளன. இம்மாதிரியான பெயர்களில் செயல்பட்டால்தான் வெளிநாட்டு சந்தைகளில் குறிப்

## குழந்தைகளை வாங்கும்முறை விசித்திரமானது

கோயம்புத்தூரிலுள்ள இவ்வநாதை இல்லங்கள் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள பிரசவ விடுதிகளில் தங்கள் ஏஜண்டுகளை நியமித்து செயல்பட்டு வருகின்றன. இந்த ஏஜண்டுகள் பாசம் மிக்க பெண் இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம்.

## தென் கரப்பனூரான்

பாக அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் தமது "சரக்குகள்" நல்ல விலை போகும் என்று அந்த அநாதை இல்ல ஸ்தாபகர்கள் கருதுகின்றனர்.

குழந்தைகளின் வாழ்வு சிறக்க வேண்டும், அவர்களுக்காகவும் நாம் சிந்திக்க வேண்டும், இன்றைய குழந்தைகள் தான் நாளைய தலைவர்கள் என்று முழங்குபவர்கள் குழந்தைகளைப் பற்றி சிந்திப்பதற்கென கடந்த ஆண்டை சர்வதேசசிறுவர் ஆண்டாகக் கொண்டாடினார்கள். அந்த ஆண்டில்கூட கோயம்புத்தூரிலிருந்து சுமார் 60 குழந்தைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

திருமணமாகாமல் கர்ப்பம் தரித்து பிரசவ விடுதிகளில் பிரசவிக்க வரும் பெண்களிடம் இந்த ஏஜண்டுகள் தொடர்பு கொள்வார்கள். அவர்களும் பிரசவித்தவுடன் குழந்தையை இந்த ஏஜண்டுகளிடம் சந்தோசமாக ஒப்படைத்து விடுவார்கள். அவர்களுக்கும் ஒரு பெரிய சமூகச் சுமை இறக்கப்பட்டது போலிருக்கும் தவிர விவாகரத்து மூலம் குழந்தைகளைப் பராமரிக்க முடியாதவர்கள், இரண்டாம் தார கல்யாணம் செய்து மூத்த தாரத்தின் குழந்தைகளை வைத்து பராமரிக்க முடியாதவர்கள் ஆகியோரிடமும் இந்த அநாதை இல்ல ஏஜண்டுகள் பேரம் பேசியோ அல்லது அவர்களாகவே ஒப்படைக்கும்படியோ செய்துவிடுவார்கள். அவ்வாறு ஒப்படைக்கப்படும் குழந்தைகளின் தாயார், அல்லது தந்தையிடமிருந்து எழுத்து மூலமாக உறுதி மொழியைப் பெற்றுக்கொள்வார்கள்.

"'எதிர்காலத்தில் நாங்கள் குழந்தைகள் சம்பந்தமாக எந்தவித உரிமையும் கோர மாட்டோம்'' என்று அக்குழந்தையின் பெற்றோரிடமிருந்து அநாதை இல்லங்கள் உறுதி மொழி பெற்றுவிடுகின்றன.

சேலத்தில் உள்ள அநாதைக் குழந்தைகள் இல்லம் சிறைக் கைதிகளின் குழந்தைகளைத் தத்து எடுப்பதில் முனைந்துள்ளது. ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளின் குழந்தைகளைப் பராமரிப்பதில் அவர்களின் மனைவியோ பாதுகாவலர்களோ இல்லாவிடில் குறிப்பிட்ட தொகைக்கு வாங்கி விடுகின்றனர். இவ்வாறு இல்லங்களில் சேர்க்கப்படும் குழந்தைகளின் தொகை அதிகரித்ததும் அவற்றை ஏற்றுமதி செய்யும் "பணி"யில் ஈடுபடத் தொடங்கிவிடுகின்றன.

பிறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ள கனடா, ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான தம்பதிகள் சகல வசதிகள் இருந்தும் குழந்தைப்பேறு இல்லாமல் வெறுட்போடு வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். இவர்களெல்லோருக்கும் வரப்பிரசாதமளிக்கும் வகையில் அங்கு வெளியாகும் பத்திரிகைகளில் ''குழந்தையிலா தாய்ப்பாசத்துக்காக ஏங்குகிறுன். நீங்கள் ஏன் அவன் தாயாகக் கூடாது'' என்று பெரியளவில் விளம்பரம் செய்வார்கள்.

இவற்றைப் பார்த்துவிட்டு உடனேயே அங்குள்ளவர்கள் இந்தியாவிலுள்ள அநாதை இல்லங்களுடன் தொடர்பு கொண்டு குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொள்வார்கள். தத்து எடுத்துக்கொண்ட குழந்தைகளுக்கு சுமார் 7 வயது வரை ஆண்டுக்கு இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் ரூபா வரை பணம் அனுப்புவார்கள். இதைவிட பிறந்த நாள், பெருநாள் பரிசுகளாகவும் பல பொருட்களை அனுப்பி வைப்பார்கள். இவைகளையெல்லாம் இந்த அநாதை இல்லங்களே பெற்றுக் கொள்ளும். பின்னர் தத்து எடுத்துக் கொண்ட வெளிநாட்டுப் பெற்றோர்களிடம் குழந்தையை அனுப்பும் போதும் பெருமளவு தொகைப் பணத்தை ஈட்டுத்தொகையாக பெற்றுக்கொள்கின்றனராம்.

## 84 வயதில் சாதனை!

ஜே. சி பென்னி என்பவர் அமெரிக்காவில் தொடராகஏராளமான களஞ்சிய சாலைகளை அமைத்தவர் என்று பெயர்பெற்றவர் இவர் தமது 84வதுவயதில் 24 மாநிலங்களில் 51 களஞ்சிய சாலைகளின் திறப்புவிழாக்களில் கலந்துகொண்டார். 23 மாநிலங்களில் 62,000 மைல் தூரம்பிரயாணம் செய்து 105 பிரதான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

பல வருடங்களாக, யாழ்ப்பாண மக்களின் அபிமானத்தைப் பெற்ற

கதிர் ஹாட்வெயர்ஸ் நிறுவனத்தில்

எது வேண்டுமோ அத்தனையும் இலாப விலையில் கிடைக்கிறது.

'டியுகோ'-'டியுலக்ஸ்'-'பென்றலைற்'

பெயின்ற் வகைகள்

கட்டிடத் தேவைக்குரிய சகல இரும்புக்கம்பிகள், பட்டங்கள் கேடர்கள், பூட்டுப் பிணைச்சல்கள், தெறகொட்டா சிவப்பு-வெள்ளை சீமெந்து வகைகள், கறுப்பு-சிவப்பு பவுடர்கள் சுகாதார உபகரணங்கள், கல்வனைஸ்ட் பைப்புக்கள், அஸ்கத்தீன் குழாய்கள், பி.வி.சி. பைப்புக்கள், நெளித்தகடுகள், ஆணிகள், ஸ்குறூக்கள், மாபிள்க்கற்கள் அத்தனையும்

பெறுவதற்குகந்த நியாய விலை ஸ்தாபனம்

★ கதிர் ஹாட்வெயர்ஸ் ★

(TILLYS GROUP)

மொம்ஸாக் கட்டிடம், 11|1-2, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம். தொலைபேசி: 7130 தந்தி: 'கதிர்'

தலைமையகம்:

TILLYS HARDWARE STORES

424, SRI SANGARAJA MAWATTA — COLOMBO-10

Phone 27439-25420-38198 Telegrams-"TILLYS"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## நாடக உலகில் 'தாசீசியஸ் யுகம்'

அகில உலக மட்டத்திற்கு நிகராக நிச்சயமில்லை, பல தமிழ் நாடகங்களை மேடையிட்டவரும், அரங்கக் கல்லூரிமூலம் நடிகர்கள் பலரை புடம் செய்தவரும் ஆகிய அ. தாசீசியஸ் அவர்கள் உத்தியோகத்தை முன்னிட்டு இம்மாதம் நைஜீரியா செல்ல இருக்கின்றார். அவரது சேவையைப் பாராட்டுமுகமாக நாடக அரங்கக் கல்லூரி நடாத்திய தேநீர் விருந்துபசாரத்தில் பேசிய கலைஞர் மௌனகுரு "நாடக உலகில் தாசீசியஸ் யுகம் நடக்கிறது" என புகழாரம் சூட்டினார். 'தனி மனித சாதனையில் தனக்கு நம்பிக்கை இல்லையென்றும், கலை கூட்டுமுயற்சி என்றும் வலியுறுத்திய தாசீசியஸ் தன்மேல் உள்ள அன்பு காரணமாய் மௌனகுரு அப்படிக் கூறியிருப்பினும் நான் அக்கூற்றை மறுக்கிறேன் என்றார்.

கக் கல்லூரி திறம்பட நடக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. வி. எம். குகராஜா, ஹேமலதா போன்றோர் நெறியாளகை பயிற்சி பெற்றுள்ளனர். களப்பயிற்சி பெற்ற காத்திரமான நடிகர்கள் துணை என்றும் உண்டு எனப் பேசிய பின் நன்றியும் கூறினார்.

## முல்லைக் கலைஞர் ஒன்றிய கலைக் கருத்தரங்கு

முல்லைத்தீவு உதவிஅரசாங்க அதிபர் திரு. வி. சிங்காரவேலுவால் உருவாக்கப்பட்ட இக்கலைஞர் ஒன்றியத்தில் முள்ளியவளை, முல்லைத்தீவு, குமிழமுனை, அளம்பில், செம்மலை, அம்பலவன், பொக்கணை முதலிய கிராமங்களைச் சார்ந்த சுமார் முந்நூறு நாடக, இசைக்கலைஞர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதன் முதலாவது கலைக் கருத்தரங்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் திரு. வி. சிங்காரவேலு தலைமையில் நடந்தது. முல்லைமணி வே. சுப்பிரமணியம், பெரியார் சி. உ. நடனசபாபதி என்போர் விழாவைத் தொடக்கி வைத்தனர்.

## சுப்பிரமணியஐயர் உரை

'இயல்பாகவே கவியார்வமுள்ள கலையையே வாழ்வின் நோக்கமாகக் கொண்ட முல்லைத்தீவு பகுதிக் கலைஞர்கள் தாசீசியஸ், சண்முகலிங்கம் போன்ற கலைமேதைகளது கையில் பயிற்சிபெற்றால் பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஜ்வாலிப்பார்கள். எனவே களப்பயிற்சிநாடகத்தின் உயிர் நாடி.

## தொடர்ந்த நிகழ்ச்சிகள்

கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் கலையின்பம் என்ற தலைப்பில் நாடகக் கலையின் பல்வேறு சிறப்பு அம்சங்களை சுவைபடக்கூறினார். தாசீசியஸ் அவர்கள் நாடகக் கலைஞன் ஒருவன் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்களை பயிற்சி நெறிக்குரிய வகையில் எடுத்து விளக்கியபோதும் குழந்தை சண்முகலிங்கம் நாடகக்கலைக்கு ஏன் பயிற்சி அவசியம் என்பதை தமக்கேயுரிய நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுத்தியபோதும் கருத்தரங்கு அமைப்பாளர்களது நோக்கம் நிறைவடைந்தது.

## நாடகாசிரியருக்கு மூக்குடைப்பு

வாக்குவன்மை மிக்கவர் பேர்னாட்ஷா. அறிவுத்திறனால் மற்றையோர்க்கு மூக்குடைத்தவர். காதல் உணர்ச்சி பெண்களுக்கு எத்தனை வயதுவரை தொழிற்படும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஷா 75 வயதுக்கு மேற்பட்ட மாமியாரிடம் சென்று 'பெண்களுக்கு எத்தனை வயதுக்குப்பிறகு காதல் உணர்ச்சி வருவதில்லை' என்று கேட்டார். தயக்கத்துடன்தான் கேட்டார். 'இதைப் பற்றி என்னைவிடப் பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் [illegible] பதட்டமில்லாமல் [illegible] ஷாவை மட்டந்தட்டினார்.

# கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

## வாழ்த்தி மகிழ்ந்தோர்

தேக்கமடைந்திருந்த நாடக உலகை விடாமுயற்சிகளாலும் முன்னணிக்குக் கொண்டுவந்தவர் அ. தாசீசியஸ் என முன்னோடி நடிகர் திரு. கே. செல்வரத்தினம் தலைமையுரையில் பேசினார். 'சாணக்கியன்' போன்ற பாத்திரங்களைத் தத்ரூபமாக நடித்து புகழீட்டிய கே. பேரம்பலம், ஏ. ரி. பொன்னுத்துரை, இராசரத்தினம், நவரத்தினம், தேவராஜா, மௌனகுரு, சுந்தரலிங்கம், பேர்மினஸ், சுப்பிரமணிய ஐயர், குழந்தை சண்முகலிங்கம் போன்ற நாடகக் கலைஞர்கள் தாசீசியஸ் நாடக உலகுக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை பல வேறு கோணத்தில் கணிப்பீடு செய்து உரையாற்றினர்.

## பதிலுரையில் தாசீசியஸ்

"இளவாலை சென்கென்றீஸ் கல்லூரியில் கல்விகற்ற வேளை தமிழ், ஆங்கில நாடகங்களில் நடித்தேன். இலங்கை பல்கலைக் கழகத்தில் ஆங்கில நாடகங்களில் நடித்து, துறைபோகிய இயக்குநர்கள் மூலம் புடம் செய்யப்பட்டேன். மௌனகுரு போன்றோர் ஆடிய நாட்டுக் கூத்துக்களை நன்கு ரசித்தேன். பின் கொழும்பில் நடிகர் ஒன்றிய மூலம் நாடகக்கலையை வளர்க்க பலருடன் நானும் சேர்ந்து தொழிற்பட்டேன். நாடகம் சமூகத்தைத் திருத்த வல்ல ஒரு வலுவான ஆயுதம் என்ற கருத்தை என் உள்ளத்தில் பாய்ச்சியவர்கள் இனிய பத்மநாதன் சுந்தரலிங்கம், பேராசிரியர் கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்கள் என்பதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன் நாடக உலகில்நல்ல அறுவடைசெய்து மகிழத்தொடங்கியது நாடக அரங்கக் கல்லூரியில்தான். குழந்தை சண்முகலிங்கம், ஏ. ரி. அரசார்,கண்ணன். ஏ. ரி. பொன்னுத்துரை. கே. செல்வரத்தினம் போன்ற புகழ் பூத்த கலைஞர்கள் தந்த ஒத்துழைப்பு, களப்பயிற்சியில் பங்குகொண்டோர் காட்டிய ஆர்வம் நான் என்னை பதிப்பீடு செய்ய உதவியது. நான் வெளிநாடு சென்றாலும் அரங்

இன்ப நுகர்ச்சியால் ஏற்படும் மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தும்பொழுது நாம் சிரிக்கிறோம். அந்தச் சிரிப்பினிலே எம் முகம் மலர்கிறதல்லவா? அந்த மலர்ச்சிக்கு நிகரேது? அதிலும் இயற்கையாய் அழகிய பற்களை உடையவர்கள் சிரிக்கும்பொழுது அவர்கள் முகப்பொலிவைக் கூற வார்த்தையும் உளதோ? தம்மை மறந்து பூம்புனல் ஆடும் மார்கழி மங்கையரின் மலர்ந்த சிரிப்பழகைக் கண்ட மாணிக்க வாசகர் சும்மா இருப்பாரா? "முத்தன்ன வெண்ணகையாய்" என்றும் "ஒண்ணித்திலநகையாய்" என்றும் எப்படி அழகாக வர்ணித்திருக்கிறார் சிலருக்கு உறுதியுள்ள வெண்மை மிக்க பற்கள் நேர்த்தியாகவும் வரிசையாகவும் முளைத்து, முகத்திற்கு கவர்ச்சியைக் கொடுத்திருப்பதைக் காண்கிறோம். இஃது இயற்கையன்னை அவர்களுக்கு அளித்திருக்கும் கொடை. சிலருக்கு வெண்மை மிக்க பற்கள் இருந்தாலும், அவை ஒழுங்கான வரிசையில் முளைக்காது முன்னும் பின்னுமாகவேனும், நிறப்பாகவேனும் முளைத்து அவர்களின் முகபாவத்தையும் அழகையும் குறைக்கின்றது. சிலருக்குப் பற்களின் வடிவம் இயற்கையில் அழகாயமைய பாது மாறுபட்டிருக்கும் இன்னுஞ் சிலருக்குச் சில பற்கள் முளைக்காமலே இருந்துவிடக் கூடும். இத்தகைய குறைபாடுகளாலேயே ஒருவரின் முகத்தழகு குறைந்தும் கூடியும் வேறுபடுகின்றது.

# பல் வைத்தியம்-11

# பற்களும் முக அழகும்

## ஒழுங்கீனமாய் முளைக்கும் பற்களை நிரைப்படுத்தி அழகு செய்தல்: [ORTHODONTIC TREATMENT]

ஒழுங்கீனமாய் முளைத்த நிலையான பற்களை அழகு படுத்தமுடியுமா? ஆம்! நவீன பல் வைத்தியத்தினால் முன்னும் பின்னுமாகவேனும், வடிவைக் குறைப்பதாகவேனும் பற்கள் அமைந்திருந்தால் அழகை வருவிக்கும்பொருட்டுத் தோற்றத்தை மாற்றியமைக்கமுடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த வைத்தியத்துறையும், அது மேற்கொண்ட அறிவியன் முறைகளும் புகழ் பெற்றனவாக இருக்கவில்லை. ஆனால் இன்று இத்துறையைப் பற்றித் தெளிவான விளக்கம்கொண்டு ஏற்ற காலத்தில் உகந்த சிகிச்சை செய்விப்போர் தொகை அதிகரித்துவருகின்றது. இவ்விளக்கம் பல் வைத்தியத்துறையின் மேலான போதனைகளாலும், சாதனைகளாலும் பொதுமக்களிடம் படிப்படியாகவளர்ந்து வரும் அறிவின் பிரதிபலிப்பேயாகும்.

வளர்ச்சியடைந்துவரும் நவீன சிகிச்சை முறைகளைப் பற்றிக் கடந்த சில ஆண்டுகளாகத் தோன்றியிருக்கும் ஆர்வமும் விழிப்புணர்ச்சியும் பொதுமக்களிடம் நம்பிக்கையை வளர்த்துவருகின்றன. முன்னே கூறியபடி பிள்ளைகளிற் சிலரே ஒரு குறைபாடும் இன்றி நன்கமைந்த பல்வரிசையைப் பெற்றிருக்கின்றனர். இங்ஙனம் கூறும்பொழுது இரண்டு முக்கிய தன்மைகளை நாம் நோக்குதல்வேண்டும்.

(அ) வடிவு அல்லது அழகு (Aesthetics)

(ஆ) ஒழுங்கமைந்த இணக்கமுடைய பல்வரிசை. (Balanced occlusion)

பலரின் பல் வரிசைகள் மேற்கூறிய தன்மைகளுடன் அமையாவிட்டாலும் வெளித்தோற்றத்திலும், மெல்லுந்திறமையிலும் ஓரளவு திருப்தியுடையனவாயிருக்கின்றன.

இன்னுஞ் சிலருடைய அழகிய பற்கள் வரிசையில் அமைந்திருந்தாலும் மேல்-கீழ் வாய்ப்பற்களின் இணக்கம்(Articulation) சமப்பட்டிருப்பதில்லை. இவைகளினாலும் சில பாதகமான விளைவுகள் உண்டாகலாம். இத்தகைய இடர்ப்பாடான நிலையை இந்நவீன பல் வைத்திய முறையால் மாற்றி அமைத்தல் நன்மைபயக்குமெனினும் ஒருவரும் இதனைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அழகமைந்த முகங்களை அழகிழந்த தோற்றமடையச் செய்யப் பற்களே காரணம் என்பதை அறிந்தவுடனே வைத்தியரே தஞ்சமென்று கருதிச் சிகிச்சை பெறுகின்றனர்.

இந்தப் புதியசிகிச்சைபாற் பற்களை நேர்ப்படுத்தி, உருப்பமைந்த நிலையில் நிறுத்தி முகத்தையழகு செய்தல் இந்நாளில் எல்லாராலும் விரும்பப்படுவதொன்று. இலங்கையில் இத்தகையதொரு சிறந்த வைத்தியமுறை இருப்பதைப் பலர் இன்னமும் அறியாதிருக்கின்றனர். இத்தகைய வைத்திய முறையின் நோக்கம் முகத்துக்கு வசீகரத்தைக் கூட்டி அழகுபடுத்துவதுடன் பற்கள் நீண்டகாலம் நிலைத்தற்கு ஏதுவான ஒரு மாற்றத்தையும் கொடுப்பதாகும்.

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

## பல்வரிசையின் குறைபாடுகள் சந்ததிவழியாகத் தொடருமா?

பெரும்பாலும் பல் வரிசையின் ஒழுங்குக் குறைவுகள் பரம்பரையாலே தொடரும் (Hereditary) தன்மையுடையன. பொதுவாகப் பற்களின் அளவு (Size) வடிவம் (Shape) தொகை (Number) வளர்ச்சி (Growth) முதலியனவெல்லாம் தலைமுறையுரிமையாகத் தொடர்பான அலகுகளின் (Jaws) பருமை, வளர்ச்சி மேல் அலகுக்கும் கீழ் அலகுக்கும் உள்ள தொடர்பு என்பனவும் தலைமுறையுரிமையாகத் தொடர்வன. இத்தன்மையாலேதான் பெற்றோர் சிலரிடமிருக்கும் ஒழுங்கற்ற பல் வரிசையும் ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற மேல்வாய்-கீழ்வாய் அலகுகளும் அவர்களின் பிள்ளைகளிடமும் காணப்படுகின்றன.

(தொடரும்)

## 'நவரசம்'

(கையெழுத்துப் பிரதி)

'நவரசம், கையெழுத்து இதழ் கண்ணுக்கும் கருத்துக்கும் அமைவாக, கரவெட்டி இலக்கிய ஆர்வலர் ஒன்றியத்தினர் தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

முதலாவது மாத இதழ் எடுத்தவுடனேயே அட்டைப் படம் (கிருஷ்ணன்-ராதை) கண்களை கவர்ந்திழுக்கக் கூடியதாக பல வர்ணங்களால் வரையப்பட்டிருப்பதை நம்ப முடியாமலிருக்கிறது ஆச்சரியம் தான். ஆனால், சில குறைபாடுகளை ஓவியர் கவனிக்கத் தவறிவிட்டார்.

வாழ்க்கைச் செலவு மட்டுமல்ல, ஒரு புத்தகமே வெளியிடுவதற்கு அச்சகச் செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளையில், இதுபோன்ற தரமான கையெழுத்துப் பிரதிகள் வெளியிடுவதை, வாசகர்கள் நிச்சயம் வரவேற்பார்கள்.

இவ்விதழை எழுதித் தயாரிப்பது, அச்சுருபத்தில் வெளிவருவதை விட பெரும் சிரமம் என்கிறார், இவ்விதழ் ஆசிரியர் கனை. மகேஸ்வரன் அவர்கள்.

இவ்விதழில் சிறுவர் கவிதை, ஆசிரியத் தலையங்கம், கட்டுரை, சிறுகதை, நகைச்சுவை, உபதேசக் கதைகள், விமர்சனக் கட்டுரை, போன்ற ஒரு மாத இதழுக்குரிய சகல அம்சங்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

வாசிப்பதற்கு ஏற்றவகையில் எழுதப்பட்டிருப்பதும், கதைகளுக்கேற்ப படங்கள் வரையப்பட்டிருப்பதும் பாராட்டுக்குரியது.

- வாமா -

## அளவெட்டி அருணோதயாவில் 'பொறுத்ததுபோதும்'

10-வது தடவையாக நாடக அரங்க கல்லூரியின் 'பொறுத்தது போதும்' நாடகம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 10-5-80-ல் மேடையேற இருக்கிறது. ஜனாதிபதி பரிசாக்காக போட்டியில் இந்த நாடகம் [illegible] நாடகம்.

## விசித்திர பிராணி!

உலகிலேயே மிக அதிக பற்களைக் கொண்டபிராணி ஆஸ்திரேலியாவில் இருக்கின்றது. நம்பாட் என்று அழைக்கப்படும் இந்தப் பிராணிக்கு 50 பற்கள் உண்டு.

## "உனக்குள் நான்"

குளிரும் மதியாய் நீயானால்-அதில்
மகிழும் மேகம் நானாவேன்!
கடலும் அலையும் நீயானால்-அதில்
கயலாய் நீந்தும் மீனாவேன்!
கவியும் நயமும் நீயானால்-அதன்
கருவும் சுவையும் நானாவேன்!
பூவும் மணமும் நீயானால்-அதில்
பொங்கும்தேனாய் நானாவேன்!
உயிரும் உடலும் நீயானால்-அதன்
உணர்வும் உள்ளமும் நானாவேன்!
இருளும் ஒளியும் நீயானால்-அதை
இயக்கும் சக்தி நானாவேன்!

- மண்டைதீவு 'கலைச்செல்வி,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காலம், இடம், மொழிகடந்து புகழ் பெற்றுத் திகழும் மகாகவி ஷேக்ஸ்பியர்

உல்லாசப் பிரயாணிகளையும் இயற்கை இரசிகர்களையும் ஈர்ந்து இழுக்கும் நாடுகளில் நூற்றுக்கணக்கான வருடங்களாக முதல் இடம் வகிப்பது வில்லியம் சேக்ஸ்பியர் பிறந்த நாடாகிய இங்கிலாந்து ஆகும். நூற்றுண்டுகளாக வருடந்தோறும் இலட்சக்கணக்கான உலக மக்கள் இங்கிலாந்து தேசத்துக்கு வெவ்வேறு காரணங்களிற்காகச் செல்கிறார்கள்.

இங்கிலாந்தில் கால் வைத்ததும் இவர்களில் பலரும் பறந்துசென்று பார்க்க விரும்பும் உன்னத கவர்ச்சியான இடம் ஸ்ரட்போட் அப்போன் அவொன் (Stratford-Upon Avon) ஆகும் உலகப்புகழ் பெற்ற நாடக ஆசிரியரும், நடிகரும் புலவருமான வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறப்பிடமே இங்கிலாந்திலுள்ள அழகு மிளிர் ஸ்ரட்போட் அப்போன் அவொன் என்னும் இந்தக் கிராமமாகும். 1564-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதி நாடக இலக்கியத்தால் மொழி கடந்து, நாடு கடந்து, கண்டம் கடந்து, காலம் கடந்து உலகப்புகழ்பெற்ற ஷேக்ஸ்பியர் அவதரித்தார். இங்கிலாந்துதேச சரித்திரத்தில், ஆங்கில இலக்கிய சரித்திரத்தில் இந்நாள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாளாகும். இவர் பிறந்து வளர்ந்த சுற்றுடல் மிகவும் அழகானது. வில்லியம் ஷேக்ஸ்பியர் சிறுவயதில் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறவில்லை இவரின் சிறுபிராயம் பற்றிய தெளிவான விபரங்கள் அதிகம் தெரியவில்லை இவர் பெற்ேருடன் வளரவில்லையென்றும் தாய்வழி உறவினராகிய ஒரு பிரபுவிடம் வளர்ந்தார் என்றும் ஒரு கதை வழிமுறையாக வந்துகொண்டிருக்கிறது. இதுபோன்ற நிரூபிக்கப்படாத பல கதைகளை நான் நேரடியாகப் பல பேருடன் கதைத்து ஸ்ரட்போட் அப்போன் அவொனிலேயே நேரடியாக அறியும் வாய்ப்பைப் பெற்றேன்.

பிற்காலத்தில் உலகப்புகழ் பெற்ற வில்லியம் ஷேக்ஸ்பியரின் முற்பகுதி வாழ்க்கையில் கவனத்தைக்கவர எதுவும் இருக்கவில்லை ஆனல் ஹென்றி ஜேம்ஸ் என்ற அமெரிக்க கதாசிரியர் சொன்னதுபோல் ஆங்கில உலகத்தின் மையப் பாகமும் மத்தியுமான ஸ்ரட் போட் அப்போன் அவொன் என்ற அழகாபுரியில் சேஷக்ஸ்பியர் பிறந்தமையே அவரின் வாழ்க்கையின் இளமைப்பிராயத்தில் கவனத்தைக் கவரும் அம்சமாகும். 18-ம் வயதில் தன்னிலும் பல வயது கூடிய அன்னி ஹாத்தவே என்னும் பெண்ணை 1852-ம் ஆண்டில் திருமணம் செய்தார். வாழ்க்கை வளமாக அமையவில்லை. 23-ம் வயதில் லண்டன் மாநகரிற்குப் புறப்பட்ட ஷேக்ஸ்பியர் அன்றே தனது பிற்காலப் புகழிற்கு வித்திட்டார் எனக் கருதலாம்.

லண்டன் மாநகரம் சென்ற ஷேக்ஸ்பியர் நாடகக்கொட்டைகளில் நாடகம் பார்ப்பவர்களின் குதிரைகளைக் கவனித்து, அதனுல் சிறு ஊதியம் பெறத்தொடங்கினுர். நாடகக்கொட்டகைக் குதிரைலாயத்தில் வந்துசேர்ந்த ஷேக்ஸ்பியர் தான் இடைக்கிடை சந்தர்ப்பம் வரும் பொழுது நாடகக்கொட்டகைக்குள் கவனத்தைச்செலுத்தினுர். பார்த்த நாடகங்கள் ஷேக்ஸ்பியரை நாடகம் எழுதத்தூண்டியதோ அல்லது பார்த்த நாடகங்களில் கொண்ட திருப்தியீனம் அவரின் திறமையைத் தூண்டியதோ எது எவ்வாருக இருந்தாலும் ஷேக்ஸ்பியர் சிறிது சிறிதாகப் பாக்கள் நாடகங்கள் எழுதத்தொடங்கினுர். ஷேக்ஸ்பியரின் எழுதிய நாடகக் குழுக்களின் கவனத்தை ஈர்த்தது அத்துடன் நாடகங்களில் நடிக்கவும் தொடங்கினுர். முதலாம் எலிசபெத் ராணியின் முன்பு நடத்தப் பெற்ற நாடகங்களில் பங்கு பற்றும் பல வாய்ப்பை ஷேக்ஸ்பியர் பெற்றுர். அவர் எழுதிய நாடகங்களே நாடகக் கொட்டகைக்காரர்களால் நாடகமாக்கப்பட்டது.

ஷேக்ஸ்பியர் எழுதிய முதல் நாடகம் 'டைட்டஸ் அன்ருனிக்ஸ்'(Titus Andronicus) முதல் நாடகமே வெற்றியாக அமைந்தது. பக்களின் மனதைக் கவர்ந்தது. நாடகங்களுற்குப் பின் நாடகங்களாக முப்பத்தேழு நாடகங்களையும் பதினுன்கு வரிகள்கொண்ட நூற்றுக்கணக்கான சொனெட்டுகள் (Sonnets). த றேப் ஒவ் லுக்கிறீஸ் (The Rape of Lucrese) என்ற புகழ்பெற்ற நீண்ட பாட்டு உட்படப் பல பாட்டுகளையும் எழுதினுர்.



**இ. வி. தளையசிங்கம்**
(பி. ஏ., பி. எஸ்ஸி, எவ். சி. ஏ.)

ஷேக்ஸ்பியரின் நாடகங்களை பின்வருமாறு பகுதிப்படுத்தலாம்.

## சரித்திர நாடகங்கள்

இவை இங்கிலாந்து, ரோமாபுரி ஆகிய நாடுகளின் முன்னைய சரித்திர நிகழ்ச்சிகளையும், சரித்திர புருஷர்களையும் எடுத்து இலக்கிய நாடக பாத்திரங்களாகவும் நிகழ்ச்சிகளாகவும் மாற்றியமைக்கப்பட்டவை.

இவைகளிற் பிரசித்தியானவை-

1. யூலியஸ் சீசர் (Julis Caesar).
2. சேம்பலின் (Cymbeline).
3. கிங் ஹென்றி த எயிட் (The Famous History of King Henry The Eighth).

## அன்ரனி அன் கிளியோபத்ரா

(Antony and Cleopatra)

இந்நாடகங்கள் சரித்திர ஆராய்ச்சி மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனப்படுவனவாகும். இவற்றில் பாடசாலைகளில் மாணவர்கள் விரும்பிப் படிக்கும் நாடகம் யூலியஸ் சீசர் ஆகும். மார்க் அந்தோனியின் பேச்சுகள் மாணவர்கள் ஆங்கிலப் பேச்சுப் பழகுவதற்கு மனப்பாடமாகி மேடைகளில் பேசும் பேச்சுகளாகும். வெனிஸ்வர்த்தகன் (Merchant of venice)பாடசாலை மாணவர்களைக் கவரும் இன்னெரு நாடகமாகும். அன்ரோனியோவின் மார்பிலிருந்து கொடுத்த பணத்தையும் வட்டியையும் [illegible] (My ducats my daughter) என்று ஏகபுத்திரியிலும் பார்க்கப் பணத்தை மதித்த யூதன் ஷைலொக் (Shylock) ஒரு இருத்தல் இறைச்சியை வெட்டி எடுத்தேதீரவேண்டுமென்று நீதிஸ்தலத்திற் பிடிவாதமாக நிற்கும்போது நீதிபதியாக அமர்ந்த (Portia) என்னும் பெண்ணின் "கருணை மெல்லிய மழைபோல் வானத்திலிருந்து துளிதுளியாகப் பெய்கிறது" என்ற பேச்சு (புத்திமதி) மாணவ உலகின் இன்னெரு கவர்ச்சியாகும்.

## 2. சந்தோஷ முடிவைக் கொண்ட நாடகங்கள் (Comedies)

மனவருத்தம், மனக்கவலை தரும் தொடக்கமாகத் தொடங்கி இன்பமான சந்தோஷமான முடிவில் முடிபவை. இவைகளில் பிரசித்தி பெற்ற சில;

1. ஒரு மத்திய கோடை இரவுக் கனவுகள் (Mid-summer nights dream)

இந்நாடகத்தில் வரும் ரிற்றேனியா - தேவ கன்னிகைகளின் இராணி பக் - ஞேபின் குட் வெலோ - குழந்தைகளின் நண்பர்களாவர்.

2. த ரெம்பெஸ்ற் (The tempest), ஏறியல் (Ariel) காற்றில் பறக்கும் ஆவி.

இந்நாடகங்கள் சிறுவர்களதும்: பெரியோர்களதும் மனங்களைக் கவரும் கதாபாத்திரங்களையும் விபரங்களையும் கொண்டவை. பாடசாலைகளில் 9ம்-10ம் வகுப்புகளுக்குப் பாடப் புத்தகங்களாக முன்பு இருந்தவை.

## 3. துக்க நாடகங்கள் (Tragedies)

பகிழ்ச்சியாகத் தொடங்கித் துன்பமாக முடிவன. உலகமெங்கும் மனப்பாடமாகப் பழகிவரும் இவற்றுட் சில:

1. மக்பெத் (Macbeth).
2. ஹம்லெற் (Hamlet, Prince of denmark).
3. ஒத்தெலோ (Othello, The moor of ven:ce).
4. ரோமியோ அன்ட் யூலியற் (Romeo and Jnliet).

இவைகள் மிகவும் துன்பகரமானவை. சிந்தனையைத் தூண்டுபவை. ஆழ்ந்த உலகியற் கருத்துக்கள் அடங்கியவை. மனித இயல்புகளைத் துரும்பு துரும்பாக ஆராய்வன. சித்தாந்திகள் உலகில் உயர்ந்த பதவிகள் வகிப்பதற்கு, பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்ற கருத்தை எடுத்துரைப்பன மக்பெத் பேராசையால் பெற்ற இராச்சியத்தை இழக்கின்ருன் ஹம்லெட் தீர்மானிக்கமுடியாத தன்மையால் தனது வாழ்க்கையையும் தன்னை உயிரினும் மேலாகக் காதலித்த ஒப்லீயாவின் (Ophlia) வாழ்க்கையையும் அழிக்கிருன். ஹம்லெட்டைப் பற்றி பதுனன்கு சொற்களில் சுருக்கமாகச் சொன்ன ஒரு இத்தாலிப் படத் தயாரிப்பாளர் பின்வருமாறு சொல்கிருர்: "This is the story of a man who could not make up his mind". ஆங்கில விமர்சகர்களிலும் பார்க்க ஷேக்ஸ்பியரின் நோக்கத்தைத் திறம்பட எடுத்துக் கூறியுள்ளார். "மனத்தில் ஒரு முடிவெடுக்கத் தெரியாத ஒருவனின் சோகக் கதை-" ஒத்தெலோ ஷேக்ஸ்பியரின் காப்பியக் கதாநாயகன். எத்தனையோ யுத்த களங்களைக் கண்டவன். கண்ட யுத்த களங்களிலெல்லாம் வெற்றிமாலை சூடியவன வெனிஸ் மாநகரத்திற்கு அரப் [illegible] சேவை செய்தவன் இயாகோவின் (Iago) வஞ்சனையையும் தன் இளம் காதலியின் தூய்மையையும் பிரித்தறியமுடியாமல் தன்னையும் அவளையும் அழிக்கிருன். சேக்ஸ்பியரின் மனித இயல்பை எடுத்துக் காட்டும் உலகம் மெச்சும் திறமைகளின் உதாரணங்கள் இந்நாடகங்கள்.

சேக்ஸ்பியர் முதலில் எழுதிய காலத்தில் நாடகக் கொட்டகைகள் முதலில் நடித்துக் காட்டிய காலத்தில்

(9-ம் பக்கம் பார்க்க)

# 500 பாம்புகளுடன் ஒரே வீட்டில் குடித்தனம்!

தமிழ் நாட்டில் மாம்பழத்திற்குப் பெயர் பெற்ற சேலம் நகரில் ஏப்பிரல் 14-ம் திகதி அதிசயம் ஒன்று நிகழ்ந்துள்ளது. ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளியின் வீட்டில் 500 க்கும் அதிகமான பாம்புகள் காணப்பட்டன. அவற்றில் பல பயங்கர நஞ்சுள்ளவை. இவைகள் வீட்டு வளைக்குள் இருந்ததை அறியாமல் இத் தொழிலாளியின் குடும்பம் பல காலமாக அங்கு குடித்தனம் நடத்திவந்துள்ளது.

பகல் முழுவதும் உழைத்து விட்டு பெரியசாமி (வயது 50) என்ற அத் தொழிலாளி இரவில் சாப்பிட உட்கார்ந்தார். அவரது தொடையில் பாம்பு ஒன்று ஏறியது. உடனே கூச்சலிட்டு அதனை உதறினுர். பாம்பு ஒரு பாய் அடியில் ஒளிந்து கொண்டது. தொழிலாளி பாயைத் தூக்கியதும் பாயின் அடியில் இருந்த மற்ெரு பாம்பு அவரைக் கடித்து விட்டது. பாம்புக் கடிக்காக தகுந்த சிகிச்சை செய்து கொண்ட பெரியசாமியும் அவரது மனைவியும் மூன்று குழந்தைகளும் இறந்த வெளியில் தூங்கினர்.

மறுநாள் காலையில் பெரியசாமியின் மனைவி வீட்டுக் கதவைத் திறந்த போது அந்த இரு பாம்புகளையும் கண்டு கூச்சலிட்டு அக்கம் பக்கத்தவர்களை அழைத்தாள். பாம்புகள் ஒரு வளைக்குள் நுழைந்துவிட்டன எனவே அந்த வளையைத் தோண்ட ஆரம்பித்தனர். சற்று நேரத்தில் பாம்பை அடிக்க வந்தவர்களே நடுங்கி ஓடும் அளவுக்கு வளைக்குள் இருந்து ஒன்றன் பின ஒன்ருக 500 க்கும் மேற்பட்ட பாம்புகள் வர ஆரம்பித்தன. இதனுல் பெரும் திரளான மக்கள் கூடி பாம்புகளுடன் போராட்டம் நடத்தி அவைகளை அடிக்க ஆரம்பித்தனர். சிலர் பாம்புக் கடியும் பட்டனர். சுமார் 50 பாம்புகள் இந்தக் கலவரத்தில் நழுவி ஓடி விட்டன. மற்றப் பாம்புகளை எல்லாம் அடித்துவிட்டனர். அடிபட்ட பாம்புக் குவியல்களைப் பார்க்கும் போது புடலங்காய்களை பெரிய தோட்டத்தில் பறித்து குவித்தது போல இருந்தது. இந்த அதிசய சம்பவம் தமிழ் நாட்டில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரே புற்றில் தாத்தா, பாட்டி, பேரன், பேத்திகள் என்று 500 க்கும் மேற்பட்ட பாம்புகள் வசித்ததும் ஒரு உலக 'ரிகார்டு' ஆகும்.

இந்த சம்பவத்திளுல் அதிர்ச்சியடைந்த சிலர் அந்த பகுதியிலிருந்து வீட்டைக் காலி செய்துகொண்டு போய்விட்டனர்.

– ரவி –

# சத்தியம் பேசு தம்பி!

சத்தியம் பேசு தம்பி - புவியில்
நித்தியம் நிலைத்து வாழும்
சத்தியம் மட்டும் பேசும் - உயர்
பத்தியம் காக்க வேண்டும்

சத்திய வழியில் நின்ருல் - என்றும்
மெத்தவே தொல்லை உண்டு
இன்னல்கள் பலவும் சேரும் - இன்றும்
துன்பங்கள் பலவும் சூழும்!

துன்பங்கள் சூழக் கண்டு சற்றும்
துவண்டிடக் கூடாதுள்ளம்
இன்னல்கள் நேரும் போதும்-உன்தன்
இன்முகம் காட்டி நிற்பாய்!

சத்தியன் அரிச்சந்திரன் அன்று-தந்த
சத்தியம் காக்க வேண்டி
புத்திரன் மனைவி விற்ருன்-பின்னும்
எத்தனை துன்பம் ஏற்ருன்!

சத்தியம் விரதம் காத்த - எங்கள்
சத்திய மூர்த்தி காந்தி
சத்தியத் துணையைக்கொண்டு-மண்ணில்
எத்தனை பணிகள் செய்தார்!

சத்திய விரதம் காப்போர்-என்றும்
இத்தரை மக்கள் நெஞ்சில்
நித்தியமாக வாழ்வார்-எனவே
சத்தியம் பேசு தம்பி!

-முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மைக்காலங்களில் மத்திய கிழக்கு நாடுகள் ஏற்படுத்திய

# எண்ணெய் நெருக்கடியும் உலக நாடுகளில் ஏற்பட்ட தாக்கமும்

கி. ஆறுமுகம் பி. ஏ. (புவியியல் சிறப்பு)

இருபதாம் நூற்றாண்டின் ஒரு பொருளாதார வளமாக நிலநெய் விளங்குகிறது. இன்று ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்திலும் இதன் பங்கு முக்கியமானதாக வுள்ளது. சக்தியைக் கொடுக்கும் வலுப்பொருளாக நிலக்கரி, இயற்கை வாயு, யுரேனியம், அணுசக்தி, மரம், காற்று, சூரிய ஒளி, நிலநெய் என்பன காணப்பட்டபோதும் தற்காலத்தில் இவைகளில் முக்கிய வலுவாக நிலநெய் விளங்குகின்றது.

நிலநெய்யானது முக்கியம் பெறக் காரணம், இதற்குப் பொருத்தமான பிரதியீடுகள் இல்லாமை, வலுவாக மாத்திரமன்றி மூலப்பொருளாகவும், 300க்கு மேற்பட்ட உபபொருட்களாகவும் மாற்றப்படும் தன்மை, சேமித்து வைக்கக் கூடிய நிலை, நிரப்பலைக் கட்டுப்படுத்தும் திறன் போன்ற அம்சங்கள் காணப்படுவதால் இதன் செல்வாக்கு உலகநாடு நாடுகளில் முக்கியம் வகிக்கிறது. எரிபொருள் பாவிப்பில் 63 வீதம் பெற்றோலியமே பாவிக்கப்படுகின்றது.

நிலநெய்யானது பெற்றோலியம், டீசல், தார், மண்ணெண்ணெய் எனப்பாகுபடுத்தப்படுகிறது. உலகின் எண்ணெய் வளத்தில் மத்திய கிழக்கு நாடுகள் பெருமளவைக் கொண்டுள்ளன. மத்திய கிழக்கு நாடுகள் எனும்போது சவூதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத், இஸ்ரவேல், சிரியா போன்ற நாடுகள் அடங்குகின்றன. இந்நாடுகள் உலக உற்பத்தியில் அதிக எண்ணெயை உற்பத்திசெய்வதுடன், நுகர்ச்சியிலும் மிகக்குறைந்தளவையுங்கொண்டுள்ளன. இத்தகைய தன்மையால் உலக நாடுகள் அனைத்தினதும் சாப்புக்குக் காரணமாக விளங்குகின்றன. இதனைக் கீழ்க்காட்டப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து அறியலாம்.

| நாடுகள் | உற்பத்தி மி.மெ. தொன் 1974 | நுகர்வு 1974 |
|---|---|---|
| ஆபிரிக்கா | 483.2 | 140.2 |
| வட அமெரிக்கா | 2338.2 | 2654.6 |
| தென் அமெரிக்கா | 102 | 146.5 |
| மத்தியகிழக்கு நாடுகள் | 1667.7 | 119.7 |
| ஆசியா | 309 5 | 676.6 |
| ஐரோப்பா | 624.5 | 1539.1 |

### மத்தியகிழக்கு நாடுகள் எண்ணெய் நெருக்கடியை ஏற்படுத்துவதற்கான காரணம்

இந்நாடுகளின் எண்ணெய் உற்பத்தியின் பெரும் பங்கையும், 1960-ம் ஆண்டுவரை அந்நிய கம்பனிகளான டச்சு-அமெரிக்கா, ஆங்கிலேயக் கம்பனிகள் மூலமே நடைபெற்று வந்தன. அப்பொழுது எண்ணெய்க்கிணறுகள் பல நாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கே சொந்தமாக இருந்தன. இவை அதிகமான எண்ணெயை அகழ்ந்ததுடன், குறைந்த விலையில் தமது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன. இக்கம்பனிகளுக்கிடையில் ஏற்பட்ட போட்டி காரணமாக விரைவான அகழ்தலில் ஈடுபட்டன. இவ்வாறான தன்மை தொடர்ந்து நீடிக்குமானால் தமது நாட்டு எண்ணெய்வளம் மிக விரைவில் குறைவதுடன் தமது பொருளாதாரமும் சீரடையும் என இந்நாடுகள் நம்பின. அத்துடன் இஸ்ரவேலுக்கும் அரேபியாவுக்கும் இடையேயேற்பட்ட யுத்தத்தின் காரணமாக எண்ணெய் உற்பத்திசெய்யும் மத்திய கிழக்கு நாடுகள் எண்ணெயை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி சடுதியான எண்ணெய்நெருக்கடியை ஏற்படுத்தின.

### மேற்கொண்ட நடவடிக்கைகள்

எண்ணெய் உற்பத்திசெய்யும் மத்தியகிழக்கு நாடுகள் ஒன்றுசேர்ந்து தமது பொருளாதாரத்தைப் பேணிக்காக்கவும், நாட்டின் எதிர்காலத்தை வளம்படுத்தவும், அந்நிய நாடுகளின் தலையீட்டைக் குறைக்கவும் பல எண்ணெய் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டன. அவையாவன: உற்பத்தியை குறைத்தமை, விலையைக் கூட்டியமை, சுத்திகரிப்பை மேற்கொண்டமை, வர்த்தகத்தைக் குறைத்தமை என்பன அடங்கும். இதனால் இங்கு தேசிய அரசாங்கங்கள் உருவாக்கப்பட்டதுடன் அந்நிய கம்பனிகளுக்குப் பூரண எதிர்ப்பும் ஏற்பட்டன. இவை காரணமாக அந்நிய கம்பனிகள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

எண்ணெய் விலையதிகரிப்பினால் ஒரு பீப்பா எண்ணெய் மரபு ரீதியாக 1.80 டொலராகவும், 1972-ம் ஆண்டில் 2.59 டொலராகவும், 1973ம் ஆண்டில் 5.11 டொலராகவும் ஏற்றம் அடைந்தது. 1974-ம் ஆண்டு, 1979ம் ஆண்டுகளிலும் விலையேற்றம் ஏற்பட்டன. தொடர்ந்தும் விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

### எண்ணெய் நெருக்கடியால் உலகநாடுகளில் ஏற்பட்ட தாக்கம்

அமெரிக்க, ஆங்கிலேய, டச்சுக்கம்பனிகள் எண்ணெய் [illegible] மத்திய கிழக்கு நாடுகளில் [illegible] காலத்தில் குறைந்த விலையில் எண்ணெயை அகழ்ந்ததுடன், தத்தம் நாடுகளுக்கு குறைந்த விலையில் ஏற்றுமதியும் செய்தன. இதனால் அதிக இலாபத்தை அடைந்தன. அத்துடன் அகழ்ந்தெடுக்கப்பட்ட எண்ணெயைத் தத்தம் நாடுகளில் சுத்திகரிக்கவும் அனுப்பின. மிகுதி எண்ணெய்களை சேமித்ததுடன் ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்தன. எண்ணெய் நெருக்கடி நிலை ஏற்பட்டதனால் இவை இந்நாடுகளில் இருந்து வெளியேறியதுடன் அதிக விலை கொடுத்து எண்ணெயை வாங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

பொதுவாக எண்ணெய் நெருக்கடி ஏற்பட்டதனால் உலகநாடுகளின் இயந்திரங்களைப் பெருமளவு தாக்கிவிட்டது எனலாம். வாயுநிலையங்கள், மின்சாரக் கட்டணங்கள் என்பனவற்றின் விலை மிகவும் கூடியது. ஆரம்ப காலத்தில் எண்ணெய் அதிகளவு கிடைத்தன. இதன் காரணமாக விருத்தியடைந்த நாடுகள் தமது தொழில் நுட்பத் திறமையால் இயற்கை றப்பர் நார் போன்ற உற்பத்திகளை விட்டு, செயற்கை உற்பத்திகளை அதிகளவில் செய்து பெரும் இலாபத்தைத் திரட்டின. விலை ஏற்றம் கைத்தொழில் வளங்கள் காணப்பட்ட நாடுகளின் பொருளாதாரத்தைத் தாக்கியதுடன் சர்வதேச ரீதியிலும் பெரும் பிரச்சினையைக் கொடுத்ததெனலாம்.

போக்குவரத்துச் சாதனங்களைப் பெற்றோலின் விலை ஏற்றம் நேரடியாகவே தாக்கியது. இதனால் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் வாகனங்களுக்குக் கட்டுப்பாடு, வேகத்தடை என்பன ஏற்பட்டன. இதனால் நகரங்களில் போக்குவரத்துத் தடைப்பட்டதுடன், சேவையகங்களின் நுகர்ச்சி மக்களுக்குப் பூரணமாகக் கிடைக்கும் வாய்ப்பு அரிதாகிறது.

குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரமும் தாக்கமுற்றது. இந்நாடுகளிலிருந்து தேயிலை, றப்பர், தெங்கு, அரிசி, தகரம் போன்ற பொருட்கள் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டு வருகின்றன. விலையேற்றத்தால் போக்குவரத்துக் கட்டணம் உயர்வடைந்ததால், இப்பொருட்களின் மூலம் பெற்ற வருமானம் குறைவடைந்தது.

எண்ணெய் நெருக்கடியினால் மறைமுகமான தாக்கங்கள் பலவும் ஏற்பட்டன. வேலை நேரம் நீடிக்கப்பட்டது. அதிக செலவு, சேவைத்துறை வளர்ச்சி தடைப்பட்டது. நகராக்கம் குறைவடைந்தது. பொதுசனத் தொடர்புகள் குறைவடைந்தது. வாகன உற்பத்தி தடைப்பட்டது. ஒவ்வொரு துறையிலும் உற்பத்தி, வெளியீடு குறைவடைந்ததுடன் அதிக செலவு, அதிக முதல் என்பன ஏற்பட்டதால் அந்நாடுகளின் பொருளாதார மேம்பாட்டைச் செலவினங்கள் பாதித்தன.

### எண்ணெய் நெருக்கடியின்போது

விருத்திபடைந்த நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா, சோவியத் யூனியன் போன்ற நாடுகள் எண்ணெய் நெருக்கடியின் போது எண்ணெய் நுகர்வைக் குறைக்கத் தொடங்கின. எண்ணெய் வழங்குவதில் விநியோக முறை பின்பற்றப்பட்டது. பகல் நேரங்களில் மின்சார விளக்குகள் எரிதல் தடுக்கப்பட்டது. வர்த்தகநிலையங்கள் குறைந்த நேரம் தொழிற்பட்டன. மின்சாரம் விளம்பரத்துக்குப் பாவிப்பது தவிர்க்கப்பட்டது. வாகனப் போக்குவரத்தும் விமானப் போக்குவரத்தும் குறைக்கப்பட்டது. வேகமாக வாகனங்கள் செலுத்துவது தவிர்க்கப்பட்டதுடன், எல்லா நடவடிக்கையிலும் தனிப்பட்டவரின் போக்குவரத்து குறைக்கப்பட்டது. இவ்வாறு இந்நாடுகள் செய்தபோதும் எண்ணெய்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுக்கொண்டே இருந்தது.

எதிர்காலத்திலும் ஓரளவு எண்ணெய் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக உலகநாடுகள் இப்பொழுது புதிய வலுக்களைக் கண்டுபிடிக்கத் தொடங்கியதுடன், அவற்றைப் பயன்படுத்தவும் தொடங்கியுள்ளன. அத்துடன் புதிய எண்ணெய்க் கிணறுகளைக் கண்டுபிடிப்பதுடன், மிக ஆழம்வரை எண்ணெய் அகழ்

(9-ம் பக்கம் பார்க்க)

# துளிகள்

வரதர்

### பழைய நினைவுகள்

ஈழத்து இலக்கிய வாதிகள் 1940-க்குப் பிந்திய சில வருடங்களை 'மறுமலர்ச்சிக்காலம்' என்று குறிப்பிடுவார்கள். 'மறுமலர்ச்சி' என்பது அந்தக் காலகட்டத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஓர் இலக்கிய சஞ்சிகை. இந்தச் சஞ்சிகையை வெளியிட்டவர்கள் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச்சங்கம்' என்ற பெயரில் அப்போது இயங்கிய ஒரு சங்கத்தின் குழுவினர் இலக்கிய ஆர்வம் கொண்ட இளைஞர்களை ஒன்று சேர்த்து இப்படி ஓர் அமைப்பை உருவாக்கவேண்டுமென்று சிந்தித்த முக்கியமான நாலைந்துபேரில் நானும் ஒருவன். இந்த அமைப்புக்கு நான் முதலில் தெரிந்தெடுத்த பெயர் என்ன தெரியுமா? 'புதுமைப்பித்தர்கள்!'

'புதுமைப்பித்தர்கள்' என்ற பெயரில் சங்கத்துக்கன ஒழுங்கு விதிகளைக் கூட எழுதித் தயாரித்திருந்தேன். ஆனால் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்திலேயே இந்தப் பெயர் பெரும்பான்மை வாக்குகளால் அடிபட்டுப் போயிற்று.

அந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு எழுத்தார்வமுள்ளவர்களைத்தவிர சும்மா கதைபடிக்கிற பலரும் வந்திருந்தார்கள். 'புதுமைப்பித்தர்கள்' என்ற பெயரை வைத்துக்கொண்டால் நாளைக்கு நாங்கள் ரோட்டால் போகும்போது 'இதோ பித்தன் போகிறான்!' என்று கேலிசெய்வார்கள் என அவர்களில் ஒருவர் நியாயம் சொன்னது இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. நான் எவ்வளவோ வாதாடியும் கடைசியில் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' என்ற புனிதமான பெயரே அந்த அமைப்புக்கு வைக்கப்பட்டது.

புதுமைப்பித்தர்கள் என்ற பெயர் அடிபட்டுப்போனதில்-ஏதோ மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுவிட்டதுபோல அன்று எனக்குச் சரியான கவலை!

### செய்தியின் பின்னால்

அராலி வடக்கு செல்வா நினைவுக்குழுவினர் நடத்திய ஒரு கூட்டத்தில் பேசிய ஈழவேந்தன், "தன்னைப்போன்ற ஒரு தலைவரைத் தோற்றுவிக்க செல்வா தவறிவிட்டார்" என்று பேசியிருப்பதாக ஈழநாட்டில் செய்திவந்திருக்கிறது. அவர் தந்தை செல்வாவை உண்மையில் குற்றம் சொல்கிறாரா அல்லது தற்போதுயர்ந்து நிற்கும்ஒருதலைவர் தகுதிகுறைந்தவரென்று குற்றஞ்சாட்டுகிறாரா என்று தெரியவில்லை. ஈழவேந்தன் தொடர்ந்து பேசுகையில், "தந்தை செல்வா தனிமனித வழிபாடு வேண்டாம்; கொள்கையைத்தான் வழிபடவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்" என்றும் சொல்லியிருக்கிறார்.-அவர் எதையோ நேரடியாகச் சொல்வதற்குத் தயங்கி, சுற்றிவளைத்துக் கொண்டிருக்கிறார் போலத் தோன்றுகிறது. [தன்னைப் போன்ற ஒரு தலைவனைத் தோற்றுவிக்கத் தந்தை செல்வா தவறிவிட்டார்" என்றுதான் பேசவில்லை என்று பின்னர் ஈழவேந்தன் மறுத்திருக்கிறார். ஆனாலும்...]

### பொன்மொழி

காதல் என்பது பாலுணர்ச்சியோடு எழுகின்ற ஓர் இனிய பிணைப்பு-அவ்வளவுதான். இதற்குத் "தெய்வீகத்தன்மை" கொடுப்பதும், இது முற்பிறவித் தொடர்பு என்பதும், பிற்பிறவிக்கும் தொடருமென்பதும் அந்தக்காலத்துக் கற்பனையாளர்களின் கெட்டித்தனம். வாழ்க்கையில் ஒருமுறை, ஒரே ஒருவர்மீதுதான் காதல் வருமென்பதும் அதையே வாழ்க்கை முழுவதும் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்பதும் கீழைத்தேசத்தின் உழுத்துப்போன பண்பாடுகளுக்கு ஓர் இறுக்கமான வேலி. "காதல் போயிற் சாதல்!" என்பது-அதைப் பாரதியே பாடியிருந்தாலும்-சரியான முட்டாள்தனம்!

### வெள்ளி விழா சிறப்பு மலர்

வண்ணை — சாந்தையர் மடம் ஸ்ரீசற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் வெள்ளி விழா சிறப்புமலரொன்றை வெளியிட்டுள்ளனர்.

இம்மலரில், 'புனிதவாய் மலர்ந்த முதல்', 'சிவாகமம் சைவ சமயிகளுக்கு சிறப்பு நூலாவது எங்ஙனம்', 'விநாயகப் பெருமான்', 'மணிவாசகரும் திருவாசகமும்' 'பஞ்சமுக விநாயகர்', 'நான்கு வித மனிதர்கள்', 'சைவ மதத்திற் பெண்கள்', 'இறைவன் திருவருள்' என்ற அரிய கருத்துக்களை எடுத்து விளக்கும் கட்டுரைகளை முறையே பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம், சைவப் புலவர் வ. கந்தசாமி, அறிஞர் க. சி. குலரத்தினம், பண்டிதர் சி. தம்பிஐயா, சிவஸ்ரீ க. லோகநாத சர்மா. திருமுருக கிருபானந்தவாரியார், திருமதி சி. கணேசபிள்ளை, யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திரு. வ. கோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் எழுதி உபகரித்துள்ளனர்.

கைக்கடக்கமானதொரு மலராக வெளிவந்துள்ள இவ் வெள்ளிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துக்கவியொன்றை நம. சிவப்பிரகாசமும், கீர்த்தனையொன்றை வை. ச. செந்தில்நாதனும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

சமயப்பெரியார்களும், நிறுவனங்களும் இம்மலருக்கு ஆசி கூறியுள்ளனர். வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. சீதாராமசாஸ்திரி, பண்டிதமணி, இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள், சிவதரும வள்ளல் திரு க. கனகராசா, இந்துக் கலாச்சார ஆலோசனைச் சபையினர் ஆகியோர் ஆசி வழங்கியுள்ளனர்

இவ்வெள்ளி விழாச் சிறப்பு மலர் சைவத்தமிழ்மக்களால் அவசியம் படிக்கப்படவேண்டியதொன்று.

-க. நாகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரித்திரப் புகழ்பெற்ற செஞ்சதுக்கம்

சோவியத் ரஷ்யாவிலுள்ள முக்கிய இடங்களுள் செஞ்சதுக்கமும் ஒன்றாகும். 1490-ம் ஆண்டில் கிரெம்ளினைச் சுற்றியுள்ள கட்டிடங்கள் அழிக்கப்பட்டு செஞ்சதுக்கம் உருப்பெற்றது. செஞ்சதுக்கம் பல்வேறு காலங்களில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. முதன் முதலாக மாட் (Mart) என்று அழைக்கப்பட்டது. செஞ்சதுக்கம் என்ற பெயர் 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடப்பட்டது.

மாஸ்கோவின் முதலாவது உயர்கல்வி நிலையமான "ஸ்லாவெனிக்கோ கிரீக்கோ லத்தீன் அகடெமி' செஞ்சதுக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. இச் சதுக்கம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகளோடு பிணைப் பின்னப்பட்டுள்ளது 1612-ல் வீரமிக்க ரஷ்யப் போர்வீரர்கள் இச் சதுக்கத்தினூடாக படையெடுத்து மாஸ்கோவையும், ரஷ்யாவையும் போலந்து ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டார்கள். சரித்திரப் புகழ் வாய்ந்த 1917-ம் ஆண்டு அக்டோபர் புரட்சியும் இச் சதுக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

அக்டோபர் புரட்சியின் கதாநாயகனான வி. இ. லெனின் அவர்கள் செஞ்சதுக்கத்திலே தோன்றி மக்களுக்கு உரையாற்றினார். அத்தோடு படைகளின் அணிவகுப்பை பார்வையிடவும், நகரத்துத் தொழிலாளர்களை சந்திக்கவும் இச் சதுக்கம் உதவிற்று. லெனின் காலமானதும் மூன்றே நாட்களில் இச்சதுக்கத்தில் மரத்தாலான கல்லறையொன்று கட்டப்பட்டது. 1924-ல் கல்லறை இத்தார மரத்தினால் திரும்பவும் கட்டப்பட்டு, இதைச் சுற்றி அறுகோண அமைப்புள்ள முற்றமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. லெனின் கல்லறையை காவலாளிகள் நாள் முழுவதும்காத்துவருகிறார்கள். அவர்கள் மணிக்கொருதடவை முறை மாறும் காட்சி பார்ப்போரை பரவசப்படுத்துகின்றது. வருடா வருடம் மே முதலாம் திகதியும், நவம்பர் ஏழாம் திகதியும் செஞ்சதுக்கத்தில் விருமுறைஅணிவகுப்பு இடம்பெறுகின்றது.

முதன் முதலாக விண்வெளிக்கு சென்று உலக சாதனையை ஏற்படுத்திய வீரர் யூரி ககாரினுக்கு இச்சதுக்கத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் திகதி மிகப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. யூரி ககாரின் அன்று இச்சதுக்கத்தில் தோன்றி தமது சக வீரர்களுக்கு தமது பிரயாண அனுபவத்தை விளக்கினார்.

- நா. இரகுநாதன்

# மாணவர் எண்ணம்

## ஆசிய ஜோதியில் கவிமணி கையாண்ட உவமைகள்

'கஸ்மோஸ்'

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தனது கவிதையிலே பாட்டிற்கு பொருத்தமான இலகுவான முறையில் உவமைகள் விளக்கிச் செல்கிறார். இதனை நன்கு விளங்க வேண்டுமாயின் சில உவமைகளை எடுத்து விரிவாக ஆராய்தலே சிறந்த முறையாகும்.

புத்தர் அவதாரம் எனும் பகுதியில் சேலொத்த கண்ணியொரு தேவியும் உண்டு எனக் கூறிச் செல்கிறார். கவிமணி மாயா தேவியைக் கூற வந்த இடத்தில் கவிமணி மீன் போன்ற கண்ணையுடையவள் எனக் கூறி அவளுக்கு ஒரு தனிச் சிறப்பையே கொடுக்கின்றார். முன்னொரு நாள் மீனின் கண்ணைப் பார்த்தார். அதே கண்ணால் தேவியைப் பார்த்தார். கவிமணி சிறந்த ஒரு கவிஞரல்லவா? இதனால் அன்று பார்த்த கண்ணை மாயாதேவியின் கண்ணுடன் ஒப்பிடும் பொழுது அவரது கவிதை சிறப்பாக அமைகிறது.

காதல் பிறந்த கதை எனும் பகுதியை நோக்கினால் அங்கும் பெண்ணாகிய யசோதரைக்கு சிறப்பிடம் கொடுக்கிறார். இதிலிருந்து அவர் பெண்களுக்கு கொடுக்கும் மதிப்பு புலனாகிறது.

பாரதி கூறிய வீறு கொண்ட பெண்ணைக் காட்சியளிக்காமல் அடக்கமான, பண்பான சமம், என்கின்ற ஆன்றோர்கள் மொழியின்படி கவிமணி குழந்தைகளைப் பாராட்டிப் பல பாடல்கள் குழந்தைகளைப் பற்றிப் பாடியுள்ளார். அந்த இடத்தில் வைத்து நோக்கும் போது கவிமணி எவ்வளவு அழகாக மேற்கூறிய உவமையை சித்திரித்துள்ளார் என்பது புலனாகின்றது. மலருக்கு குழந்தையை ஈடு கொடுக்கிறார்.

நட்ட தழைகளெல்லாம் -
வளர்ந்து
நாற்புறமும் கவிந்து
கட்டின மாளிகை போல் -
வனத்தில்
காட்சியளித்ததம்மா!

பூவொடு காய் கனியும் -
தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
மேவு பல மணிகள் - இழைத்த
விதானமும் ஆனதம்மா!

இவ்விரண்டு பாடல்களிலும் கவிமணியின் உவமையாற்றல் கூடுதலாகப் புலனாகிறது. ஏழைச் சிறுவன் ஒருவன் மணி சுஜாதையைப் புகழ்ந்தும் அது மட்டுமல்லாமல் அவளது தோற்றத்தையும் உவமை மூலம் வர்ணிக்கிறார். ஆசிய ஜோதி எனும் நூலில் மட்டுமல்ல கவிமணியின் மற்றைய நூல்களிலும் அவருக்கு கவிதை யாக்கத்திற்கு அடித்தளமாக அமைவது இவ் உவமைகளே. பூத்த தாமரை பொலிவுறு முகத்தினள் என்று அவள் முகத்தில் இலக்குமி குடிகொண்டிருப்பதையும், மானைப் போன்ற விழியுடையாள் என்று அவளது மான் போன்ற விழிகளையும், மயில் போல் அவளது அழகையும், தேனைப் பழித்த மொழியுடையாள் என்று தேன் இனிப்பது போல இனிமையுடைய நாவிலிருந்து எழும் சொற்களையும் விளக்குகின்றார். எவ்வளவு அருமையாக விளக்கிச் செல்கிறார் பார்த்தீர்களா? இது மட்டுமா சுஜாதையை வர்ணித்து விட்டு அவளது பொறுமையே உருவான மற்றொரு தோற்றத்தை சந்திரமதி போல் நின்ற தையல் என விளக்குகிறார். சந்திரமதி தன் மகனை இழந்தது போல இங்கு சுஜாதையும் தன் மகனை இழந்து விட்டாள். இவ்வாறு பெண்மையின் குண நலன்களை பாரதிக்கு எதிராகப் பாராட்டிச் செல்கிறார் கவிமணி.

புத்தர் அரச வாழ்வைத் துறந்து துறவியாகி களைத்துச் சோர்ந்து சுஜாதையிடம் செல்லும் போது சுஜாதை அறுசுவை உண்டி அளிக்கின்றாள். அதை உண்ட புத்தர் நிலையை கவிமணி விளக்கிச் செல்வதைப் பார்ட்போம். தளர்ந்த பறவையோர் தடாகம் கண்டு குளித்துக் குடித்துக் குதூகலிப்பது போல புத்தர் நிலையை உணர்த்துகின்றார். இங்கு புத்தர் ஒரு தளர்ந்த பறவையாகவும் அதேபோல் சுஜாதை நீர்த்தடாகமாகவும் காட்சியளிக்கின்றார். இத்துடன் பெண்ணையே தனது கவிதையில் படைத்திருக்கின்றார், அதனாலேயே மேற்கூறப்பட்டதில் மாயாதேவியை "சேலொத்த கண்ணி" என விளிக்கின்றார். இங்கு 'திங்களைப் பழிக்கும் திருமுக வினாசினி' என விளிக்கின்றார். இத்துடன் இந்தப் பெண்ணுடன் பல்வேறு பெண்கள் பரிசுகள் வாங்கிச் செல்கின்றார்கள். ஏன் அப்பெண்களையும் உவமைகள் மூலம் விளக்கியிருக்கலாமல்லவா? ஆம்! இதற்கும் காரணம் உண்டு. கடைசியில் பரிசு வாங்க வந்த பெண்ணாகிய யசோதரை என்பவள் சித்தார்த்தனின் மனைவியாக வரப்போகின்றாள் என்பதை உணர்ந்த கவிமணி திங்களுக்கே அவளை ஒப்புவித்துவிட்டார். நல்ல சந்தர்ப்பத்தில் அருமையான ஓர் உவமையை கையாண்டுள்ளார் கவிமணி.

இத்துடன் நின்று விடாது ஒவ்வொரு பகுதியிலும் கவிமணி கையாண்டுள்ள உவமை உணர்ச்சி பயப்பனவாய் மிளிர்கின்றன.

சித்தார்த்தன் துறவு எனும் பகுதியில், சித்தார்த்தன் கூறியதன் பொருளைப் பாருங்கள். 'மலரென உந்தன் வயிற்றினில் வளரும் மகவு" எனக் குறிப்பிடுகின்றார் கவிமணி. குழந்தைப் பாடல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 'குழந்தை' செல்வத்திற்கு நட்ட தழைகள் எல்லாம் கவிமணியின் கவிதைக்கு மாளிகை போல் காட்சியளித்தன. இது மட்டுமல்லாமல் கவிமணி, சித்தார்த்தன் ஓர் இறைவன் என்பதைப் புலப்படுத்துவதாகவும் அமைகிறது. இது சிறுவனின் அன்பையும் புலப்படுத்துகின்றது. ஒரு சின்னஞ்சிறிய உவமையை எடுத்து பல்வேறு பொருள் விளங்குமாறு விளக்கியுள்ளார். இங்கு வள்ளுவரை நினைவு கூர வேண்டிய சந்தர்ப்பத்தை

### செல்வி வசந்தி

(க. பொ. த. உயர்தரம்-
முத்துத்தம்பி வித்தியாசாலை- திருநெல்வேலி)

ஏற்படுத்தித் தருகின்றார் கவிமணி. "வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க' எனும் கூற்று கவிமணியின் கவிதையில் புலனாகிறது. வள்ளுவர் தனது குறளில் சிறிய ஒரு உவமை மூலம் பெரிய கருத்து நிறைந்த பொருளை புலப்படுத்துவது போல கவிமணியும் தனது கவிதையில் அதே முறையை வள்ளுவரைப் பின்பற்றிக் கையாண்டுள்ளார் என்றே கூறலாம்.

கருணைக் கடல் எனும் பகுதியில் ஆடுகளைப் பலியிடுவதற்கு பிம்பிசார மன்னன் கட்டளைப்படி குண்டங்கள் நிறைய நெய் விட்டு எரித்தார்கள் இது எவ்வாறு எரிந்ததென கவிமணி கூறுகின்றாரெனில், கோபுரம் போல் உயர்ந்தது என்று வர்ணிக்கின்றார். மக்கள் அதிசயமுறும் வகையில் கூறிச் சென்றுள்ளார். நெருப்பு வேகமாகப் பற்றி எரிந்தது என்பதிலும் பார்க்க கோபுரம் போல உயர்ந்ததம்மா என்று இலகுவான முறையில் விளக்கிச் செல்கிறார்.

கவிமணி கையாண்டுள்ள உவமைகள் மக்கள் மனதிலே முழுக் கதையையும் "பசுமரத்தாணி" போல் பதிய வைக்கின்றது. எவ்வெவ் இடங்களில் எப்படியான உவமைகள் கையாளப்படல் வேண்டுமென்பதை உணர்ந்து அதற்கேற்ற வகையில் கையாண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது புத்தரும் சுஜாதையும் எனும் பகுதியில் பல்வேறு கோண அடிப்படையில் கவி நின்றுவிடாது அவரது களைப் பெல்லாம் கனவுபோல் பறந்ததாகக் கூறப்படுகின்றது. பண்டைக்காலத்து இலக்கியம் போல கவிமணியும் உவமைகளை அடுக்கிச் செல்கிறார்.

முன்பு யசோதையின் பாலனை 'மலர்' எனக் குறிப்பிட்ட கவிமணி அங்கு அதாவது சுஜாதையின் உயிரற்றுக் கிடக்கும் மகனாகிய பிணத்தை 'வாடும் மலர்ச்செண்டு' என்று பொருத்தமுற அமைத்துவிட்

[9ம் பக்கம் பார்க்க]

## ஒலிம்பிக்ஸ்: சில சுவையான தகவல்கள்

21 போட்டிகளில் 203 செட் மெடல்களுக்கு வீரர்கள் போட்டியிடுவார்கள்.

கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் இருந்து புறப்படும் ஒலிம்பிக் பந்தம் 5,000 கிலோ மீட்டர்கள் பிரயாணம் செய்து மாஸ்கோவையடைய 30 நாட்கள் பிடிக்கும்.

மாஸ்கோ ஒலிம்பிக்ஸ் கிராமத்தின் பரப்பு 107 ஹெக்டர் ஆகும்.

ஒலிம்பிக்வீரர்களின் தேவைகளை கவனிக்க 300 டாக்டர்களும் அதே தொகையான வைத்திய உதவியாளர்களும் பணியாற்றுவார்கள்.

43 மொழிபேசும் 10,500 மொழிபெயர்ப்பாளர்கள் சேவையாற்றுவார்கள்.

வீரர்களின் சாப்பாட்டுத் தேவைகளை கவனிக்க 18,000 சமையல்காரர்கள் முழுமூச்சாக உழைப்பார்கள்.

ஒலிம்பிக் தபால் கந்தோர் தினமும் 50 லட்சம் கடிதம், பார்சல் ஆகியவற்றைக் கவனிக்கும்.


ஒலிம்பிக் சம்பந்தப்பட்ட விழா வைபவங்களில் பாவனைக்காக பங்குபற்றும் நாடுகளின் 1 500 கொடிகளை மாஸ்கோ சோடனைத்துறை தொழிற்சாலை உற்பத்திசெய்யும்.

ஒலிம்பிக் காலத்தில் (2 வாரங்கள் 600 நாடக அரங்கேற்றங்கள், 1,500 சதம்ப கலை நிகழ்ச்சிகளும், 150 சர்க்கஸ் காட்சிகளும் நடைபெறும்.

மாஸ்கோ ஷெரமெத்யேவா -2 விமான நிலையத்தில் விசேஷமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பகுதி, மணித்தியாலத்துக்கு 2 100 பயணிகளை வரவேற்று கவனிக்கும்!

போட்டிகளுக்கு முன்னர் ஒலிம்பிக்ஸ் கம்பியூட்டர்களுக்கு 35-000 விளையாட்டு வீரர்கள், மத்தியஸ்தர்கள் இத்தியாதிபற்றிய தகவல்கள் அனைத்தும் கொடுக்கப்படும்.

கால நேர கணிப்புக்காக ஒலிம்பிக் விழாவுக்கு விசேஷமாக உற்பத்திசெய்யப்பட்ட 'ஒஸ்தன்கினோ' டெலிவிஷன் ரேடியோநிலையத்திலுள்ள கடிகார அமைப்புகள் மிகவும் நுட்சுமமானவையாகும். தவறு ஏற்படும் பட்சத்தில் 365நாட்களில் ஒரேயொருவினாடியாக மாத்திரமே இருக்கு .



ஒலிம்பிக் பிரதான போட்டிகள் நடைபெறும் மாஸ்கோவிலுள்ள மத்திய லெனின் ஸ்டேடியம்

## ஆத்ம பரிசுத்தம்

உலக தரிசனத்திற்காய்
இரண்டுவகை ஆடைகளை
உடுத்த ஆத்மாக்களின்
பரிசுத்தம் காப்பதற்காய்,
கண்டுபிடிக்கப்பட்ட
ஆடைகளின் விலைகள்
ஐம்பதுக்குள்ளுமிருக்கும்!
ஐநூறு தாண்டியுமிருக்கும்.

ஐம்பதுக்குள் முடிந்து
முடிச்சுகள் கலந்து
போர்த்திய ஆடைகள்
பரிசுத்தம் காக்க,
ஐந்நூறு தாண்டிய
ஆடைகள் மேனியை
முழுதாய் மறைக்க
மறுக்கும்; அப்போது
ஆத்மாக்களின்
பரிசுத்தம் தெருவில்
விலைபோகும்.

-சி இரா. தனபாலசிங்கம்
(நெல்லியடி மத்திய
மகாவித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜகம்ஸ் (கன்னுகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(சனி - புதியபிரதி)

வெல்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராஜன் - புஷ்பலதா
பூவும் பொட்டும்

மனோஹரா A (சுன்னாகம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - சுஜாதா நடித்த
மயங்குகிறாள் ஒருமாது
Coming soon
The Living Desert

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்.நகர்) போன் 1898
தினசரி 4 காட்சிகள்
மரகதம் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ரதிகா-ஜெயசந்திரிகா
நம்பியார்-ஷீலா மனோரதிகலா-V. R. ஸ்ரீ நடித்த
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும் பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ராஜா (யாழ்நகர்) கடைசி இரு தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
★ மரிக்கார் ராம்தாஸ் ★ அப்புக்குட்டி ராஜகோபால்
★ உபாலி செல்வசேகரன்
மற்றும் பலர் நடித்த
கோமாளிகள் (புதிய பிரதி)
குறிப்பு:
1978-ம் ஆண்டு எம். ஜி. ஆர். தலைமையில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சகல நடிக நடிகைகளும் பங்குபற்றிய செய்திச்சுருளும் காண்பிக்கப்படும். எம். ஜி. ஆர், ராஜா படமாளிகைக்கு விஜயம் செய்துள்ளார். முதல் மந்திரியாக, இந்திய திரைப்பட விழாமூலம் உங்கள் நெடுநாள் ஆவலைப் பூர்த்தி செய்யக் காட்சி தருகின்றார்.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

SANTHI JAFFNA Phone 7647
Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
ஜனத்திரள் நிறைந்த 2வது கடைசிவாரம்!
பண்டைக்கால நெப்போலிய மன்னன் கதையைப் பின்னணியாகக் கொண்ட இப்படம் குழந்தைகள் முதல் அனைவரும் பார்த்து மகிழவேண்டிய ஒப்பற்ற ஹாஸ்ய சித்திரம் விறுவிறுப்புமிக்கவாள் சண்டைகள்! வயிறுகுலுங்கச் சிரிக்கவைக்கும் கேளிக்கைகள் யாவும் சினிகலர் வண்ணத்தில்
THE LOVE AND TIMES OF
SCARAMOUCHE

# காலம் இடம்...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

அவரின் நாடகங்களிற்கு நாடக உலகில், இலக்கிய உலகில், விமர்சனர் உலகில், பொது மக்கள் மத்தியில் எவ்வளவு பெரிய வரவேற்பு இருந்ததோ அவ்வளவு வரவேற்பு இக்காலத்திலும் இருப்பதை நான் எனது கண்களாலே இங்கிலாந்தில் கண்டுள்ளேன். என்றும் இளமையும், என்றும் கன்னிக் கவர்ச்சியும் இழைக்கப்பட்ட (Inter-Woven) ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் ஒவ்வொரு வருடமும் வசந்த காலத்தில் ஸ்ரட்போட் அப்போன் அவொன் என்ற அவரது இங்கிலாந்து நாட்டிலேயே அழகு பொழியும் கிராமத்தில் அமைக்கப்பட்ட அழகும், செல்வச் சிறப்பும் செறிந்த ஷேக்ஸ்பியர் தியேட்டரில் உலகப் புகழ் பெற்ற ஆங்கில நடிகர்- நடிகைகளால் நடிக்கப்படுகின்றன. இவ் வசந்த காலத்தில் இங்கிலாந்தில் ஸ்ரட்போட் அப்போன் அவொன் ஒரு திருவிழாக் கோலம் பூணுகின்றது. ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஷேக்ஸ்பியரின் கருத்தைத் திறம்பட எடுத்துக் காட்டி நடிக்கும் நடிகர்களுக்கு இங்கிலாந்து அரச குடும்பம் சிறிய, பெரிய கௌரவப் பட்டங்கள் அளித்து ஊக்குவிக்கின்றது. ஆங்கில ஏகாதிபத்தியத்தை அல்லது ஷேக்ஸ்பியரை கைவிடுங்கள் என்று முன்பு கேட்ட ஒருவரிற்கு ஏகாதிபத்தியம் என்றாவது ஒரு நாள் போவது ஆனால் ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தின் நிரந்தர செல்வம் எனறு சொன்ன பெருமையை பெற்றவர் ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆவார்.

## ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி

இலங்கையில் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி தொடர்பான ஆய்வுரைக் கட்டுரையொன்று ஈழநாடு வாரமலரில் தொடர்ந்து வெளிவரும் திரு எஸ். பத்மநாதன் இதனை எழுதுகிறார்.

# எண்ணெய்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தலையும் மேற்கொண்டுள்ளன. மற்றும் எண்ணெய் போதியளவு கிடைக்கும் காலங்களில் தேவையான அளவைச் சேமித்துவைத்தல், எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளுடன் நீண்டகால ஒப்பந்தங்களைச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன

ஹரன் (காங்கேசன்துறை)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்-விஜயகுமாரி நடித்த
கருணாநிதியின்
பூமாலை (புதிய பிரதி)

# ஒரு உண்மை......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறையைக் காணவில்லை...சர்வ சாதாரணமாய் எல்லாருமே அந்த பொது இடங்களுக்கும் சென்றுவந்தனர். உயர்சாதியினர் என்று சொல்லப்படுபவர்களைக் கண்டதும் தாழ்ந்த சாதியினர் என்று கருதப்படுகிறவர்கள் கூனிக் குறுகி போகுகின்ற கும்பிடுகள் மறைந்திருந்தன. கல்வியில் முன்னேற்றம் தெரிந்தது. பிரதீப்பின் பள்ளித் தோழன் சுந்தரம் டாக்டராகி வேறு ஊரில் இருப்பதாக அறிய முடிந்தது... சாதி வேறுபாடுகளை மறந்து மக்கள் தமது தொகுதிக்குக்கூட தாழ்த்தப்பட்டவர் என்று கருதப்படும் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை பிரதிநிதியாய் தெரிந்திருந்தனர்.

பிரதீப்பிற்கு மனத்திலுள் ஒரே நிறைவு. சாதிக்கு சாவு மணி அடித்துவிட்டனர் பதின் மூன்று வருடங்கள் வேறு நாட்டொன்றில் இருந்து கொண்டு எனது மக்களைப் பற்றித் தாழ்வாக எண்ணியவையெல்லாம் பொய்யாகி விட்டன... அவன் மனம் ஆனந்தித்தது

பிரதீப்புக்கு அவன் எதிர்பாராத சம்பவம் வேறு ஒன்றும் நிகழ்ந்தது. அடுத்த ஊரில் உள்ள தனது சின்னம்மா குடும்பத்தினரை காண்பதற்காக சென்றபோது அங்கு எதிர்பார்த்திருக்காத ஒருவரை பிரதீப் சந்திக்க நேர்ந்தது. அவனது ஆருயிர் நண்பனான சுந்தரத்தை கண்டபோது அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. பிரதீப்பின் சின்னம்மாவின் மகன் நாதனுடன் சுந்தரம் ஒன்றாக தொழில் புரிகின்றானாம். அந்த முறையில் நாதன் சுந்தரத்தை தமது வீட்டிற்கு அழைத்துவந்திருந்தான்.

பிரதீப்பைக் கண்ட சுந்தரத்திற்கும் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. பழைய நண்பர்கள் அல்லவா! நண்பர்கள் இருவரும் பலமணிநேரம் சுவராசியமாக உரையாடிக்கொண்டனர். அவர்கள் கதைப்பதற்கு அனேக விடயங்கள் இருந்தன. வெகு நேரத்தின்பின் சுந்தரம் தனது வீட்டு விலாசத்தை பிரதீப்பிடம் கொடுத்து தமது வீட்டுக்கு மறுநாள் கட்டாயமாகக் வரவேண்டும் என்று அன்புக்கட்டளை இட்டு விடைபெற்றுச் சென்றான்.

பிரதீப்பின்மனத்திற்குஏதோ சாந்தி கிடைத்ததைப்போல் இருந்தது. தன் பழைய நண்பனைச் சந்திக்கவேண்டும், பேசவேண்டும் என்ற அடிமனத்தில் இருந்த ஏக்கம் தீர்க்கப்

(10-ம் பக்கம் பார்க்க)

# ஆசியஜோதியில்..

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டார் பொருளுக்கேற்ற உவமை இவரது கவிதையாற்றலையே புலப்படுத்தி நிற்கின்றது.

நீடும் மதியினைப் போல் நிலவெறிக்கும் செல்வமுகமென சுஜாதையின் மகனின்முகத்தை சுட்டிக்காட்டுகிறார். சந்திரனின் பால் நிலாப்போல விருந்தை தன்முகத்தை அமாவாசை இருட்டாக்கிவிட்டார் கவிமணி.

தன் மகனை இழந்த சுஜாதையை கவிமணி கண்ணெரிந்த பகலின் முகத்துடன் ஒப்பு நோக்குகிறார். இது எவ்வளவுக்கெவ்வளவு பொருத்தமுற அமைக்கப்பட்டுள்ளது.

அங்கமெலாம் வாயாக அழுதிட்டாலும் உன் மைந்தனை நீ பெறமாட்டாய் என்று புத்தர் அறிவுரை கூறுகிறார் இங்கு கவிமணி இவ்வுவமை மூலம் சுஜாதையின் அவலம் தோய்ந்த துன்பத்தினை எடுத்து விளக்குகிறார். அழுவது என்று சொல்லும்போது வாய் எனும் அங்கத்தினை மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால் இங்கு அங்கம்முழுவதும் வாயாக உவமிக்கப்படுகின்றது.

கடைசி அடியாக கண்விழியாம் பிணம் வைத்துக்காப்பதுண்டோ எனும் தொடர் கூறப்படுகிறது. அஃதாவது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தபின் 'பிணம்' என்று சொல்லப்படும் இச்சடப்பொருளை யாராவது கண்விழித்துக் காவல் பார்க்கிறார்களா? எனும் வினாவுடன் கவிமணியின் சிறந்த இனிமையான உவமைகள் முடிகின்றன.

யாழ் நீர்வேலி ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம்
30வது ஆண்டு விழா
24-5-1980 சனிக்கிழமை நடைபெறும்
மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி
சைக்கிள் ஓட்டப் போட்டி (35 மைல்)
மரதன் ஓட்டப்போட்டி (10 மைல்)
போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 20-5-1980க்கு முன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்புகொள்ளவும்.
க. ந தியாகராஜா,
விளையாட்டுத்துறைத் தலைவர்
வலி.கிழக்கு தென் குதிப நோ கூ சங்கம்.
நீர்வேலி.
போன் 801 (5614)

விளம்பரம்
பதவி வெற்றிடம்-இலிகிதர்
மேற்படி பதவிக்குரிய விண்ணப்பங்கள் 20-05-1980 வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.
(1) கல்வித்தரம்: குறைந்தது க பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி.
தமிழ் ஆங்கில மொழிகளில் தட்டச்சு, சுருக்கெழுத்து, நன்கு தெரிந்தவராகவும், கடமையாற்றும் ஆற்றலுடையவராகவும் இருத்தல்வேண்டும்.
(2) வயது:- 25க்குக் குறையாமலும் 45க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும் 1-1-80ந் திகதியன்று
(3) பிணை:- உரொக்கம் ரூபா 500/-
ஆதனம் ரூபா 2000/-
(4) சம்பளம்:- அடிப்படைச் சம்பளம் ரூபா 160/-ம், அதற்குரிய சட்டப்படியான விசேட படிகள் எல்லாம் உட்பட ரூபா 350/-க்குக் குறையாது மாதமொன்றுக்குவழங்கப்படும்.
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்
108/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
5647

ராணி (யாழ்நகர்)
கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது
★ கமலஹாசன் (இருவேடங்களில்) ★ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களுக்கு
ஓர் நற்செய்தி......
CIC பெயின்ற் வகைகளான
டியுகோ - DUCO
டியுலக்ஸ் - DULUX
பென்றலைற் - PENTALITE
சகல வர்ணங்களிலும்
கிடைக்கிறது

கதிர் ஹாட்வெயர்ஸ்
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்:7130

## தமிழக சட்டசபைத் தேர்தல்
# 234 தொகுதிகளில் 500 பேர் போட்டி

சென்னை, மே 3

தமிழ்நாடு சட்டசபையின் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவதற்காக 2,099 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல்செய்துள்ளனர். 77-ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் 2,658 வேட்பாளர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 28-ம் திகதியும் 31-ம் திகதியும் வாக்களிப்பு நடைபெறும் தமிழ்நாடு உட்பட ஒன்பது மாநிலங்களிலும் நேற்று வெள்ளிக்கிழமையுடன் வேட்புமனுத் தாக்கல் செய்வது முடிவுற்றது.

வேட்புமனுக்களை வாபஸ் பெறுவதற்கான கடைசி நாள் நாளையதினமாகும்.

தமிழ்நாடு, குஜராத், மத்திய பிரதேசம், மகராஷ்டம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பீஹார், ஒரிஸ்ஸா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் 2237 சட்டசபை உறுப்பினர்களை இம்மாத 28-ம், 31-ம் திகதிகளில் 24 கோடி வாக்காளர்கள் தெரிவுசெய்வர்.

இம்மாநிலங்களில் 8 தேசிய கட்சிகளும் 4 மாநிலக்கட்சிகளும் மற்றும் அங்கீகரிக்கப்படாத சில கட்சிகளும் போட்டியிடுகின்றன. (இ)

மூஸாஜி சன்ஸ்
சிலோபெக் சொப்பிங் பேக்ஸ்
100 பேக் 25/-
100 ,, 45/
100 ,, 85/-
100 ,, 225/-
48'' டேபில் குலோத் 2/50
48'' ,, பிரின்ட் ,, 5/-

சீக்கோ ரேடர்ஸ்
43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

### 8 மணி நேரத்துக்குமேல் வேலை செய்யும்
# கடைச் சிப்பந்திகளுக்கு மேலதிக வேதனம் வேண்டும்
## விஜயானந்தன் வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

எட்டு மணித்தியாலத்திற்கு மேல் வேலை செய்யும் கடைச் சிப்பந்திகளுக்கு மேலதிக நேர சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

தொழிற் சங்க நடவடிக்கைக் குழுவினரின் மே தினக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். விஜயானந்தன் மேற்கண்டவாறு கூறினார். கூட்டம் யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெற்றது.

திரு விஜயானந்தன் தொடர்ந்து பேசுகையில், யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகளில் வேலை செய்யும் கடைச் சிப்பந்திகள் காலை முதல் இரவு வரை வேலை செய்கிறார்கள். அத்தொழிலாளர்களுக்கு மேலதிக நேரச் சம்பளமோ, சேமலாப நிதியோ, போனசோ வழங்கப்படுவதில்லை. கடைச் சிப்பந்திகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டணியினரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம். இதுவரை கூட்டணியினர் வரவில்லை. மனிதாபிமானத்துடன் இவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென நாம் விரும்புகிறோம். அத்தொழிலாளர்களின் வாழ்வு மறை முதலாளித்துவ ஆசிய[illegible] வாதிகள் விரும்பமாட்டார்கள். இடதுசாரித் தொழிலாள வர்க்கத் தலைவர்களால் தான் இவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட முடியும்.

தொழிலாள வர்க்கம் போராடி வென்றெடுத்த உரிமைகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசு நசுக்கி வருகிறது. அதற்குத் தகுந்த பதிலடி கொடுக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. சகல முற்போக்கு எண்ணம் கொண்ட தொழிலாள வர்க்கம் ஒன்று சேர்ந்து பலம் வாய்ந்த எதிர்ப்பைக் காட்டுவதன் மூலம் தான் நாம் வென்றெடுத்த உரிமைகளைப் பறிபோகாது பாதுகாக்க முடியும் என்றார்.

தவறான பாதையில், தவறான தலைமையின் கீழ் இயங்கும் தமிழ் இளைஞர்களை சரியான பாதையில் வழி நடத்திச் செல்ல முனைய வேண்டும்.

தென் பகுதியிலுள்ள முற்போக்கு சக்திகள் அரசுக்கு எதிராக பலம் வாய்ந்த எதிர்ப்பைத் தெரிவிக்க ஆயத்தமாகி விட்டார்கள். தமிழ்ப் பகுதியிலுள்ள முற்போக்கு சக்திகளும் அரச எதிர்ப்புப் போராட்டத்தில் தம்முடைய பங்களிப்பைச் செலுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும். (கொ)

# ஜே. ஆர். பேசும் புதிய சோஷலிஸம்

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் ஜனாப் எம். ஏ. சி. இக்பால் பேசியதாவது:-

கொழும்பில் நடைபெற்ற லெனின் நினைவுதினக்கூட்டத்தில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசும்போது, "நான் சோஷலிஸத்தை ஆதரிக்கிறேன் அது புரட்சிமூலம் உருவானதை அல்ல, அது சமாதானமாக வருவதையே ஆதரிக்கிறேன் என்றார். அவருடைய பேச்சைப்போன்று இன்று பல பிற்போக்குவாதிகள் பேசத்தொடங்கியுள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல் பல இடதுசாரிக்கட்சிகள் பாராளுமன்றம் மூலம் சமாதானமாக பாட்டாளி வர்க்க ஆட்சியைக் கொண்டுவந்துவிடலாம் எனக் கூறுகிறார்கள். நாம் இவர்களிடம் கேட்க விரும்புகிறோம் உலகில் எந்தவொரு நாட்டிலாவது சமாதானமாக பாராளுமன்ற அமைப்புமூலம் சோஷலிஸ அமைப்புத் தோன்றியுள்ளதா? நிச்சயமாக ஒரு நாட்டிலும் இல்லை என்ற பதிலையே உலக சரித்திரம் இதுவரை காட்டியுள்ளது. எனவேதான் நாம் பலாத்காரப் புரட்சிமூலமே சோஷலிஸத்தைக் கொண்டு வரமுடியும் எனக் கூறுகிறோம்.

இன்று சில இடதுசாரிக் கட்சிகள் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் சாட்டில் தந்தை செல்வநாயகத்தின் தமிழ் ஈழக் கொள்கையை ஆதரிக்க முன்வந்துள்ளார்கள். 1948-ம் ஆண்டு தமிழரசுக்கட்சியை உருவாக்கிய செல்வநாயகம் அன்றே இம் முடிவுக்கு வந்திருந்தார். அதற்காக அன்றிலிருந்தே அவர் பல வழிகளில் பலவிதமான கொள்கைகளை முன்வைத்து முயற்சிசெய்தார். அக்காலத்திலிருந்து மிக அண்மைக்காலம் வரையும் அவருடைய கொள்கைகளை எதிர்த்துவந்த இடதுசாரிக் கட்சிகளில் சில இன்று திடீரென்று தமிழ் ஈழக்கொள்கையை ஆதரிப்பதன் ரகசியம் என்ன? இன்றைய அரசின் விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் 1983ல் நடைபெறும் ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகளைத் திரட்டும் நோக்கமாகவே இக்கொள்கையை முன்வைக்கிறார்கள். இத்தகைய சந்தர்ப்பவாத நிலைமைக்கு இடதுசாரிக் கட்சிகளே முன்வந்தது மிகக்கேவலமாகும். (கொ)

வாரமலரில்
குறுநாவல்

சுஜயானந்தா-கரு தாழம்பூகொண்ட குறுநாவல்.

'ஈழநாடு' வாரமலரில் விரைவில் ஆரம்பமாகின்றது!

சிறுகதை - கட்டுரைகள் மூலம் வாரமலர் வாசகர்களுக்கு மிகவும் பரிச்சியமான பெண் எழுத்தாளர் எழுதுகிறார்.

## பொல்காவலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயில் பொல்காவலையில் திரும்பி நேற்றுப் பகல் 1-20க்கு யாழ்ப்பாணம்வந்துசேர்ந்தது.

விபத்துக்கான காரணம் பற்றி அறிய ரயில்வே திணைக்களம் பொலிசாருடன் இணைந்து விசாரணை நடத்திவருகின்றது. (ம-இ)

## ஒரு உண்மை......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதில் பரம திருப்தியாய் இருந்தது.

"என்ன பிரதீப் இரண்டு மணி நேரமாக ஒரே சிரிப்பும் கதையுமாய் இருந்தது. வெளிநாட்டில் இருந்து வந்ததும் இங்கு வந்தது எங்களைப்பார்க்கவா இல்லை உன்னுடைய சிநேகிதனைக் காணவா?" - பிரதீப்பின் சின்னம்மாவின் குரல் சிரிப்பினூடே ஒலித்தது.

"இவன் தான் சின்னம்மா என் உயிர்ச் சிநேகிதன். சின்ன வயதில் இருந்தே சிநேகிதமாய் இருந்து இடையில் பிரிந்து சென்றுவிட்டோம். இன்று அவனை டாக்டராகக் காணும் போது சந்தோஷமாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல இன்று பழைமைகள் எல்லாம் மாறிவிட்டன, சாதிவெறி அழிந்துவிட்டது. ஆனால் சிறிய வயதில் நான் அவனுடன் கூடித் திரிந்த போது அடியும் உதையும் கிடைத்தது. என்னுடன் கோவிலுக்கு வந்த சுந்தரத்திற்கும் அடியும் உதையும் கிடைத்தது. இப்படியான கடினமான சூழ்நிலையில் இறுக்கமாக வளர்ந்த எங்கள் நட்பு, வாழ்க்கையில் மறக்க முடியாதது......" - பிரதீப் கூறிக் கொண்டே சென்றான் தனது நட்பைப் பற்றிக் கூறுவதில் அவனுக்கு பெருமையாக இருந்தது. ஆனால்...

"என்ன, சுந்தரம் கீழ் சாதிப் பெடியனே?" சின்னம்மா கேட்டபோது பிரதீப்புக்கு ஒன்றும் புரியவில்லை.

"நல்ல வேளை இப்ப என்றாலும் தெரிஞ்சுது. அவனும் என்ன துணிவிலை வீட்டுக்கை வந்தானோ தெரியேலை... எங்கட சனம் கொஞ்சம் பாவ இரக்கம் பார்த்தா இவையள் வீட்டுக்கையுமெல்லே வரப்பாக்கினம்... அவன் குடிச்ச கிளாசை தூக்கி ஒரு மூலைக்கை போடுங்கோ... டேய் நாதன் இனிமேல் இவன் சுந்தரத்தை இஞ்சை கூட்டிவரப்படாது..." தன் சின்னம்மா ஆத்திரத்துடன் கூறியவற்றை கேட்டபோது பிரதீப் விக்கித்துப் போனான்.

"கட எனக்கு இவ்வளவு நாளும் தெரியாமல் போச்சுது. தெரிஞ்சிருந்தால் வீட்டை கூட்டிக்கொண்டு வருவேனே? சரியான ஆளாத்தான் இருப்பான் போல" நாதன் கோபத்துடன் கூறினான்.

முதலில் ஒன்றும் புரியாவிட்டாலும் பின்னர் பிரதீப்பிற்கு எல்லாம் புரிந்தது. பிரதீப் எண்ணியதைப்போல பழைமைகள் எல்லாம் மாறிவிடவில்லை... சாதிக்கு சாவுமணி அடிக்கப்படவில்லை.. சாதி வெறி இன்னமும் ஒவ்வொருவரினதும் இரத்தத்துடனும் கலந்து வாழ்ந்து கொண்டு தான் வருகின்றது.

இந்தக் கசப்பான உண்மைகளை பிரதீப் அறிந்துகொண்ட போது சாதி அழிந்துவிட்டது என எண்ணுகின்ற தன்னைப் போன்ற அறிவிலிகளை எண்ணி விரக்தியாகச் சிரித்துக் கொண்டான்.

(கற்பனை)

# சி. எம். ரி. இரவு பஸ் சேவை

அநேக பிரயாணிகளின் வேண்டுகோளுக்கிணங்க
பகல் நேரத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த மேற்படி
கடுகதி பஸ் சேவை
ஏப்ரல் மாதம் 29-ந் திகதியிலிருந்து
இரவு சேவையாக மாற்றி பின்வரும் நேரப்படி
யாழ்ப்பாணம் - கொழும்பு
கொழும்பு - யாழ்ப்பாணம்
கடுகதி பஸ் சேவை நடாத்தப்படுவதை சகல பிரயாணிகளுக்கும்
அறியத்தருகிறோம்.

| புறப்படும் நேரம் | புறப்படும் இடம் | போய்ச்சேரும் நேரம் |
|---|---|---|
| இரவு 9-00 | யாழ்ப்பாணம் (யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க தலைமைக் காரியாலயம்) | கொழும்பு 6-00 காலை |
| இரவு 8-00 | கொழும்பு (வெள்ளவத்தை) | யாழ்ப்பாணம் 5-30 காலை |

பயணச் செலவு
யாழ்ப்பாணம் - கொழும்பு - ஒரு வழி - ரூபா 45-00 மட்டும்
யாழ்ப்பாணம் - அனுராதபுரம் - ஒரு வழி - ரூபா 30-00 மட்டும்
ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி இல. 370, 438 & 537)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the Ceneral Post office Sri Lanka uuder No CE/8948/ 78 The Eelanaadu, Post Box No 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org